## சுதந்திரன் திரட்டும் புத்தளம் உதவி நிதி!

அண்மையில் நடைபெற்ற புத்தளம் அசம்பாவிதங்களின் போது பாதிக்கப்பட்டோர்க்கு உதவவேண்டியது மனித மனம் படைத்த அனைவரதும்கடமையாகும். இதற்காக உதவி நிதியொன்றை ஆரம்பிக்க சுதந்திரன் முடிவுசெய்துள்ளது இதுசம்பந்தமாக தொடர்பு கொள்ளவிரும்புபவர்களும், நிதி அனுப்புவோரும் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம்:-

ஆசிரியர்
சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயகா வீதி
கொழும்பு-12



# சுதந்திரன்
SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 மாசி 10, ஸபர் 21, (22 2-76) ஞாயிறு - புத்தகம் 29, இதழ் 36


# இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தி. மு. கழக அரசு தலையிட்டதாக கூறுவது

# சுத்த அபத்தம்!

## இந்திரா காந்தியின் கூற்றுக்கு கூட்டணிப் பிரமுகர் ஆப்பு!

**"தமிழ் நாட்டின் திராவிட முன்னேற்றக் கழக அரசு இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட்டதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி குற்றஞ்சுமத்தியிருப்பது உண்மையானல் – அது சுத்த அபத்தமானது; யாரோ கொடுத்த தவருன தகவலைக் கொண்டு இந்தியப் பிரதமர் இந்தத் தவருனமுடிவுக்கு வந்திருக்கிருரென்றே சொல்லவேண்டியுள்ளது"**

—இவ்வாறு தமிழர் கூட்டணிப்பிரமுகர் ஒருவர் சுதந்திரனுக்குக் கருத்துத் தெரிவித்தார். தி. மு. க. அரசைக் கலைத்ததற்கு தி. மு. க. இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டதும் ஒரு காரணமென இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியதாகநாளேடுகளில் ஒரு பரபரப்பான செய்தி சென்றவாரம் வெளியிடப்பட்டிருந்ததல்லவா? இதையொட்டி தமிழர் கூட்டணி பிரமுகரிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டபோதே மேற்கண்ட பதில் கிடைத்தது.

"தி. மு. கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்தே, அது இலங்கைத் தமிழர்கள் படும் துன்பத்துக்கு தனது அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துவந்திருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் உரிமை வாழ்வு பெற வேண்டுமென்பதில் அது ஆர்வம் காட்டி வந்திருக்கிறது. மொழியால், கலை கலாசாரத்திலுல் பண்பாட்டிலுல் பழக்கவழக்கங்களிலுல், மதத்தால் ஒன்றுபட்டிருக்கும் ஈழத் தமிழர்களிடம் தி. மு. க. அனுதாபம் காட்டியதில் வியப்பில்லை; இது இயற்கையான உணர்ச்சிதான். அண்ணு அவர்களே இலங்கைத் தமிழர்களுக்காக எத்தனையோ தடவைகள் குரல் எழுப்பியிருக்கிருர் ஏடுகளில் எழுதியிருக்கிருர்; இயக்கங்கள் நடத்தியிருக்கிருர்.

ஆனல்—தி. மு. கழகம் எந்தச் சந்தர்ப்பத்திலும்—அது ஆட்சிக்கு வருவதற்கு முன்பும் சரி ஆட்சிக்கு வந்த பின்பும் சரி—இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டதாகவோ — தலையிட முனைந்ததாகவோ குற்றம் சுமத்துவதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது அவ்வாறு

—8-ம் பக்கம் பார்க்க

# 'பிரச்சினைகளுக்கு தீர்வுகாண பிரிவினையே ஒரே வழி!'

"நாங்கள் இங்கே எப்பொழுதுமே குறைகூறிக்கொண்டும், மொழிப்பிரச்சினை, உத்தியோகப் பிரச்சினை, குடியேற்றப் பிரச்சினை, குடியுரிமைப் பிரச்சினை, ஆட்சிப் பங்குப் பிரச்சினை முதலிய உரிமைகளுக்குப் போராடிக்கொண்டும் இருப்பதிலும் பார்க்க, இவற்றையெல்லாம் ஒரே முறையில் தீர்ப்பதற்கும், நீங்கள் சிங்கள மொழியையும் பௌத்த மதத்தையும் நல்ல முறையில் வளர்ப்பதற்கும் மிகச் சிறந்த வழி நாம்பிரிந்து வாழ்வது தான்! இதுதான் வரலாறு காட்டும் வழி! நாங்கள் தனியே வாழ்வதுதான் இப்பொழுது ஒரேயொருவழி!"

## தேசிய அரசுப் பேரவையில்

### பண்டிதர் பேச்சு!



—இவ்வாறு 10-12-75ல் தேசிய அரசுப் பேரவையில் பேசிய காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம குறிப்பிட்டார். திரு. இரத்தினம் அவர்களது குறித்த உரையின் முதல் இரு பகுதிகளையும் ஏற்கெனவே சுதந்திரனில் வெளியிட்டிருந்தோம், இறுதிப்பகுதி வருமாறு:-

வடக்கு மாகாணத்திலே மன்னுருக்கும் வவுனியாவுக்

—8-ம் பக்கம் பார்க்க

"அரசு பொறுப்பேற்ற தோட்டங்களிலிருந்து

## தமிழர் வெளியேற்றம்!

### ஒரு சிங்களவரே இதைக் கூறுகிருர்!

'மலைநாட்டுத்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் அத்தோட்டங்களில் வேலைசெய்த தமிழ் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். தமிழ்த் தொழிலாளரை இப்படித் துன்புறுத்துவது பெரும் அநீதியாகும். இன்று தமிழ்த் தோட்டத்தொழிலாளர்கள் வீதிகளில் பிச்சை கேட்டுத் திரியும் நிலைமை உருவாகியுள்ளது!"


—கஹாசேன என்னுமிடத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன இவ்வாறு கூறியிருக்கிருர்.

(ஆதாரம்: 19-2-76 வீரகேசரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# பஞ்சைகளுக்காகப் போராடுவோர்
# சுகவாசிகளுக்குப் பந்தம் பிடிப்பதா?



காலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த இந்தியா, இலங்கை போன்ற கிழக்கத்திய நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்ற வரலாறு நமக்கெல்லாம் நன்கு தெரிந்ததே. அந்த வரலாறுனது, — நாட்டு மக்களிடையே போதிய, சமுதாய, பொருளாதார ஓர்மைகளை ஏற்படுத்தாததோடு, — ஆட்சி அதிகாரத்தையும் ஒரு வகையான போலிச் சோசலிசவாதிகளிடம் ஒப்படைத்துவிட்டது, இதன் காரணமாகவே, இந்த நாடுகளில், இடதுசாரி இயக்கங்கள் போதிய ஆற்றலைப் பெற்றுப் போதிய விரைவுடன் வளரமுடியாத ஒரு சூழ்நிலை இருந்துவருகிறது.

பத்திரிகை முதலிய பிரச்சார சாதனங்கள் தனி உடைமைவாதிகளிடமே உள்ளன; ஆட்சியின் குடுமியும்,—பல சமயங்களில் பல விதங்களில் அவர்களிடமே சிக்கிக்கொள்ளுகிறது. எனவே, நாட்டிலுள்ள அதிகார எந்திரம் முழுவதும், அதை வலுவாக்குவதற்குத் தேவையான பிரச்சார எந்திரம் முழுவதும் வலதுசாரிகளிடமே இருந்துவருகிறது.

இந்தச் சூழ்நிலையில், இடதுசாரி சக்திகள், தங்களை நிலைப்படுத்திக்கொள்வதற்கு ஆயிரம் தந்திரங்களைக் கையாள வேண்டியுள்ளது, இந்தத் தந்திரங்களைக் கையாள்வதில், இந்த நாடுகளில் உள்ள வலது கம்யூனிஸ்டுக் கட்சி என்னும் மாஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி,- மிகப்பலதவறுகளைச்செய்து, இடதுசாரி இயக்கத்துக்கே கெட்ட பெயரை ஏற்படுத்தி வருகிறது.

சமயம் வாய்க்கும்போது. மாஸ்கோ கம்யூனிஸ்ட்கள் (இந்த நாடுகளின்) ஆட்சிகளில் இணைந்துகொள்ளுகிறார்கள்; அல்லது ஆட்சிக்கு ஆதரவு தந்துவருகின்றார்கள். வலதுசாரிகளிடம் சிக்கிவிடாதபடி, அந்த ஆட்சிகளை, இடதுபக்கம் பிடித்து நிறுத்தவே' இப்படி, அவர்களோடு சேர்ந்து நிற்பதாகவும் இவர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள், ஆனால், இரண்டு நிலைகளிலும்.— ஆட்சியில் இருப்பவர்களின் போக்கில், எந்தச் சிறிய மாறுதலையும் இவர்களால் ஏற்படுத்தமுடியவில்லை என்பது மட்டுமல்ல; இவர்களின் ஆதரவைப் பெற்றவர்களாலேயே, இவர்கள், அடிக்கடி கடுமையாக முகத்திலே கரிபூசப்படுகிறார்கள்!

## இதோ ஒரு நிகழ்ச்சி

இந்தப் பரிதாபத்துக்குரிய செங்கொடி (மாஸ்கோ) வீரர்களின் வரலாற்றில் அண்மையில் இலங்கையிலே நடந்திருக்கும் நிகழ்ச்சி கவனத்துக்கு உரியது. இலங்கையின் ஆட்சியில் மாஸ்கோ கம்யூனிஸ்டுகளும் பங்குதாரர்கள். அதாவது, "ஆட்சியை இடதுசாரிப் பக்கம் இவர்கள் இழுத்துப் பிடித்துக்கொண்டு" அதனோடு ஒட்டிக்கொண்டு இருப்பதாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், பாவம், இவர்களைப் பங்காளிகளாகக்கொண்ட திருமதி பண்டாரநாயகாவின் ஆட்சி, —கொஞ்சநஞ்சம் இருந்த இடதுசாரிப் பந்தபாசத்தையும் அறுத்துக்கொண்டு, ஒரேயடியாக வலதுபக்கம் போய்விட்டது!

நிதியமைச்சர் (பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா) அண்மையில் வழங்கியுள்ள வரவுசெலவுத் திட்டம் இதை அப்பட்டமாக வெளிக்காட்டிவிட்டது. இந்தவரவுசெலவுத்திட்டம், பழைய நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவின் திட்டத்தையே தலைக்கீழாக மாற்றிவிட்டது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதுவரையில் எந்தெந்தச் சலுகைகளை அயல்நாட்டு முதலாளிகளுக்கு வழங்க முடியாது என்று இலங்கை அரசு மறுத்து வந்ததோ, — எந்தெந்தச் சலுகைகளைத் தந்தால்தான் உள்ளே வருவோம் என்று அயல்நாட்டு முதலாளிகள் வற்புறுத்தி வந்தார்களோ, — அந்தச் சலுகைகளை எல்லாம் அவர்களுக்கு வழங்குவதாக வாக்களித்துப் பேசியுள்ளார் பீலிக்ஸ் பண்டாரநாயகா.

அரசின் பொருளாதாரக் கொள்கைகளில் இவ்வளவு பெரிய தலைகீழ்(வலதுசாரி)த் திருப்பம் ஏற்பட்ட பிறகும், (மாஸ்கோ) கம்யூனிட் நண்பர்கள் அந்த ஆட்சியோடு ஏன் ஒட்டிக்கொண்டு இருக்கவேண்டும்? அதன் மூலம், தங்கள் இடது சாரித் தனத்துக்கே, அவர்கள் ஏன் இழுக்குத் தேடிக்கொள்ள வேண்டும்?

இப்படித்தான் எல்லோரும கேட்கிறாகள். ஆனல் கம்யூனிஸ்ட் (மா) தோழர்கள், இதை விளங்கிக் கொண்டவர்களாகவோ கொஞ்சமாவது இடதுசாரி ஓர்மை உள்ளவர்களாகவோ நடந்துகொள்ளவில்லை; தாங்களும் பங்குதாரர்களாக உள்ள சிறிமாவோ அரசு வலதுபக்கம் சாய்ந்து விட்டது என்று நாடகக்கண்ணீர் வடிக்கிறார்கள்; வலதுபக்கம் போய்விட்ட அந்த ஆட்சியிலிருந்து விலகி, தங்கள் சொந்தக் காலிலே நிற்க வேண்டும் என்ற ஓர்மையோ அதற்கான நம்பிக்கையோ அவர்களுக்கு ஏற்படவே இல்லை. தங்கள் நடையானது இடதுசாரி இயக்கத்தின் மீதே சேற்றை வாரிப் பூசுவதாக இருக்கிறதே என்ற நினைப்பே அவர்களுக்கு உண்டாகவில்லை!

## மாஸ்கோ மோகம்

மார்க்சியத் தத்துவத்தின் சில அம்சங்களையாவது செயற்படுத்திக் காட்டிய நாடு என்ற பெருமை ரஷ்யாவுக்கு உண்டு. ஆனால், புரட்சிகளும் எதிர்ப்புரட்சிகளுமாக 50 ஆண்டுகளுக்கு மேல், ஒரு தடத்தில் நடந்து வந்து, ஓரளவு சுகவாச நாடாகிவிட்ட ரஷ்யநாடு, புரட்சிகளையே அறியாத வலுமைநாடுகளின் இடதுசாரி இயக்கங்களுக்குக் கொள்கை வகுத்துத்தர முடியாது; அதற்குத் தேவையான புரட்சி முனைப்பு, இன்று ரஷ்யாவில் இருக்க முடியாது. இந்த நாடுகளின் இடதுசாரிகள், — தங்கள் தங்கள் நாடுகளின் சூழ்நிலைக்கு ஏற்ற புரட்சித் திட்டங்களை, இவர்களே தான் வகுத்துஆகவேண்டும்.

ஆனல் நடப்பது என்ன? ரஷ்யாவின் குரலுக்கே நடனம் ஆடிஆடி, 'மாஸ்கோ கம்யூனிஸ்ட்கள்' என்ற பெயர்பெற்றுவிட்ட வலது கம்யூனிஸ்ட்கள், எதற்கும் மாஸ்கோவையே தங்கள் மகாசன்னிதானமாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாஸ்கோவின் நண்பர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அரசுகள் படுபாதாள வலதுசாரி அரசுகளாக இருந்தாலும் அவைகளுக்கே இவர்கள் துதிபாடுகிறார்கள்; அந்த அரசுகள் முழுக்க முழுக்க வலதுபக்கமேபோய் விடும் போதும், — அவைகளோடேயே ஒட்டிக் கொண்டு கிடக்கிறார்கள்,

உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது,— இங்கிலாந்து ரஷ்யாவின் நேசநாடாக இருந்தது என்ற ஒரே காரணத்துக்காக, இந்தியக் கம்யூனிஸ்ட்கள் இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஆதரித்தார்கள். இப்போது அந்தத் தவறை நினைத்து நினைத்தும் சொல்லிச் சொல்லியும் வருந்துகிறார்கள்.

இதுபோல, இலங்கையிலுள்ள மாஸ்கோ கம்யூனிஸ்டுகளும்,—தங்கள் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வழிகளை ஆராய்ந்து போராட்டங்களை நடத்தாமல்.— மாஸ்கோவின் நண்பர் என்று சொல்லிக்கொள்ளும் இலங்கை அரசை ஆதரிக்கிறார்கள்; இதன் மூலம், மக்களின் மெய்யான பிரச்சினைகளுக்கு முழுக்க முழுக்க அன்னியமாகி வருகிறார்கள்.

## தான் செத்ததும் அல்லாமல்...

இவர்கள் 'ஒத்தூதல் திருத்தொண்டு' இவர்களிடையே சிலபேருக்குப் பதவிகளையும் வருமானத்தையும் தரலாம்; மாஸ்கோவுக்கும் இவர்கள் "நல்ல பிள்ளைகள்" ஆகலாம். ஆனல், மக்களின் கருத்தோட்டத்தையும் போராட்டத்தையும் புறக்கணித்த அன்றே, எந்த இயக்கமும் மக்களால் புறக்கணிக்கப்பட்டுப் போகிறது என்பதை இவர்கள் உணர வேண்டும்.

சிலருடைய சொந்த நலனைக் கருதி, வலதுசாரிகளின் முந்தானைக்குள் குடியேறுகிறவர்க்ள் தங்களையும் அழித்துக்கொள்ளுகிறார்கள்; தாங்கள் சார்ந்த இடதுசாரி இயக்கத்தையும் அழித்து விடுகிறார்கள். தான் செத்ததுமல்லாமல் சத்திரக் குளத்தையும் கெடுத்தானும் என்பது பழமொழி. சுயநலம் கருதி, தங்கள் தன்மதிப்பை அறிந்துகொள்ளும் இந்தச் செங்கொடி (மா) வீரர்கள், இடதுசாரி இயக்கத்துக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் தவறான நடைகளைக் கைவிட வேண்டும். இடதுசாரி இயக்கம் என்பது பெரும்பான்மையான பொதுமக்களின் இயக்கம். அதைத் திசை திருப்புகிறவர்களை மக்கள் சக்தி விட்டுவைக்காது என்பதை இந்தத் தோழர்கள் மறந்து விடவே கூடாது.

சாலை
இளந்திரையன்

---

● விமர்சனம்

# கதிரொளி

கையெழுத்து ஏடுகளை நடத்துவதென்பது ஒரு தனிக்கலை. இந்தக் கலை நமது இளம் எழுத்தாளர்களிடையே வளர்ந்து வருவது பாராட்டுக்குரிய ஒரு விடயமாகும். உலகத்தின் பெருந்தலைவர்கள், அறிஞர்கள் அனைவரும் தமது இளமைப் பருவத்தில் கையெழுத்துப் பத்திரிகைகளை நடத்தியவர்களே, பொறுமை, திறமை இரண்டும் கையெழுத்து ஏடுகளை நடத்து வோர்க்கு அவசியம்.

குடத்திலிட்ட விளக்காக இருக்கும் எத்தனையோ இளம் எழுத்தாளர்களது திறமையை ஓரளவு வெளிக் கொணர இந்தக்கையெழுத் தேடுகள் துணைசெய்கின்றன. மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூகநிலையத்தினர் வெளியிடும் 'கதிரொளி' எனும் கையெழுத்தேட்டின் சில பிரதிகளை அண்மையில் பார்த்தபோது பிரமித்துப் போனேன். இத்தனை திறமையா நம் இளைஞர்களுக்கு என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

8-3-74 தொடங்கி ஒவ்வோர் திங்களும்வெளியிடப்படும் இந்த ஏட்டுக்கு மு.ஆ. கந்தவேல் அவர்கள் ஆசிரியாக இருந்து திறம்படபணியாற்றிவருகிறார். ஆறுமுக நாவலர் சிறப்புமலர், பேரறிஞர் அண்ணு நினைவுமலர் போன்ற மலர்களையும் இவர்கள் வெளியிட்டுள்ளனர். நல்ல சிறு கதைகள், கருத்துள்ள கேள்வி பதில்கள், சிறந்த துணுக்குகள் பொன்மொழிகள், குறுநாவல், என்று இன்னேரன்ன பல்வேறு அம்சங்களும் கதிரொளியில் நிறைந்துகாணப்பட்டன. ஓவியர் 'வேல்' எதிர்காலத்தில் சிறந்த ஓவியராக வளர்ச்சியடைவார் என்பது தெரிகிறது. கையெழுத்துக்கள் தெளிவாகவும் அழகாகவும் உள்ளன. பாராட்டி வரவேற்க வேண்டிய முயற்சி.

கதிரொளியின் சித்திரை மலர் அச்சுப்பிரதியாக வெளிவரவிருக்கிறது. அது தமிழிலக்கியவானில் ஒளி வீச வாழ்த்துகிறோம்.

## மில்க்வைற் செய்தி

பலவழிகளிலும்சமுதாயத் தொண்டுசெய்துவரும் மில்க்வைற் தாபனத்தின் அதிபர் கொடைவள்ளல் திரு. க. கனகராசா அவர்களின் மற்றோர் சீரிய பணியாய 'மில்க்வைற் செய்தி' எனும்செய்தி ஏடு வெளிவந்துள்ளது. இதன்கௌரவ ஆசிரியராக பேராசிரியர் க. சி. குலரத்தினம் விளங்குகிறார். பல அறிவுரைகளையும் அறிஞர்களின் கருத்துக்களையும் தாங்கி வெளிவந்துள்ள இந்த ஏட்டில் தமிழ்மொழியின்சொற் சிறப்பை எடுத்துக்காட்டும் அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. பனைவளம் பற்றிய கட்டுரை பயனுள்ளது. மக்கள் பணியே மகேசன் பணியாய்க்கொண்டு தொண்டாற்றி வரும் கனகராசா அவர்களின் பத்திரிகைப் பணியும் சிறக்க வாழ்த்துகிறோம்.

---

## பட்டிருப்புத்தொகுதி தமிழ்இளைஞர்பேரவை மத்திய கிளை

குருக்கள்மடம் விநயகர் ஆலய முன்றலில் 21-1-76ல் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவைக்கூட்டத்தில் பேரவையின் பட்டிருப்புத் தொகுதி மத்திய கிளை தெரிவுசெய்யப்பட்டது. தலைவராக திரு. ம. பரமேஸ்வரன் (புரட்சி) உபதலைவராக திரு. பா. இன்பராசா, செயலாளராக திரு. த. நாராயணபிள்ளை, உபசெயலாளராக திரு. க. சோமசுந்தரம் பொருளாளராக திரு. க. சதந்திரோதயம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். 25பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. திரு. பூ. கணேசலிங்கம், மண்டூர் [illegible] ஆகியோர் உரையாற்றினர்.

---

## சுதந்திரன் புதிய சந்தா விபரம்

1976ம் ஆண்டு சனவரியிலிருந்து சுதந்திரன் புதிய சந்தா (உள்ளூர்) விபரம் வருமாறு:-

● ஓர் ஆண்டுக்கு—
(புதன், ஞாயிறு இதழ்களுக்கு) ரூபா 50-00

● அரையாண்டுக்கு— ரூபா 25-00

சந்தாப்பணத்தை காசோலையாகவோ காசுக் கட்டளையாகவோ (நேரடியாக ரொக்கமாகவோ) செலுத்தலாம்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி
சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக விதி
கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞரை விட்டால் தி.மு. கழகத்தை வழிநடத்த வேறு ஏற்ற தலைவர் கிடையாது!

"காங்கிரஸ் இரண்டும் இணைந்தது போல் தி. மு. க. இரண்டும் இணையவேண்டும் தமிழ் நாட்டில் திராவிட சக்திகள் பிரிந்து நிற்பது நல்லதல்ல" என்ற கருத்தை 15-2-76 "சுதந்திர"னில் எழுதியபோது என்னுடைய அபிலாசையை, இதயத்தில் குடிகொண்ட ஏக்கத்தைத்தான் எதிரொலி செய்தேனே தவிர; எனது கருத்தைப் பலரும் ஆதரிக்கக் கூடுமென எதிர்பார்த்தாலும் — அப்படி ஒன்று நடக்கும் என்ற நம்பிக்கையோடு எழுதவில்லை. அரசியலுக்கும் தீர்க்கதரிசனங்களுக்கும் எதுவித சம்பந்தமுமில்லாதவன் நான். ஆனால் அப்படி ஒரு கருத்து இப்படி ஒரு இடத்திலிருந்து வரமுடியுமென நிச்சயமாக நான் எதிர்பார்க்கவில்லை. ஆம், 'தி. மு. க., அ. தி. மு, க.வோடு இணைய விரும்பித் தீர்மானம் நிறைவேற்றினால் அதனை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்பேன்" என்ற எம். ஜி. ஆரின் அறிக்கையை பத்திரிகைகளில் படித்தபோது ஆச்சரியம் மகிழ்ச்சி, இனம்புரியாத இன்ப உணர்வுகள் இதயத்தில் நர்த்தனமாடின.

அ. தி. மு. க. வோடு என்ற அந்த 'வோ'டில் எம். ஜி. ஆரின் கட்சிநலன் என்ற கவசத்தை அவதானிக்க முடிந்தாலும்; இந்திரா காங்கிரசோடு கூட்டுச்சேரலாம் என எதிர்பார்க்கப்பட்ட அ. தி. மு. க. தலைவரின் இந்த அறிக்கையின் பின்னணியை நாம் முற்றாகப் புறக்கணித்துவிடமுடியாது. தி. மு. க.வைவிட அ. தி. மு. க. வைத் தன் பரமவைரியாகக் கருதிய காமராஜரின் காங்கிரசின் ஒரு பகுதியார் இந்திரா காங்கிரசோடு இணைந்துள்ளதையும், அ. தி. மு. க. வோடு இந்திரா கூட்டுவைப்பதாக இருந்தால் நாங்கள் காங்கிரசை விட்டு வெளியேறி விடுவோமென அவர்கள் விடுத்த எச்சரிக்கையையும், அனைத்திலும் மேலாக சிவாஜி கணேசன் இணைப்பில் தன்னைப்பெரிய பிரமுகராகக் காட்ட முற்பட்டு "இந்திராவின் கடாட்சத்தை"ப் பெறயாசிக்கின்ற நிலையையும், கூட்டுமொத்தமாக அவதானிக்கின்றபோது தி. மு. க.வுக்குப்போலவே தனக்கும் எதிராக எந்த நேரமும் எந்த ஆயுதமும் திருப்பப்படலாமென்பதனை எம். ஜி. ஆர். நன்கு உணர்ந்திருக்கக்கூடும்; இந்த நிலையிலே மூன்று வழிகளைக்கையாள அவர் விரும்புகிறார் என்றேபடுகிறது.

ஒன்று; தி. மு. க.வை அ. தி. மு. க. வோடு இணைத்து திராவிட சக்தியைப் பலப்படுத்துவது. இதில் அ. தி. மு. க. வோடு தி. மு. க. வந்து இணையுமென எம். ஜி. ஆர். எதிர்பார்த்து இருக்க முடியாது; எதிர்பார்க்கமாட்டார் என்றே கூறலாம். எனவே படிப்படியாக தி.மு க.வையும் அ. தி. மு. க. வையும் இணைக்கவேண்டும் என்ற அந்த 'உம்' நிலைக்கு 'வோடு' நிலையிலிருந்து அவர் இறங்கி வருவார் என நம்பலாம். 'வோடு' என்ற இந்த அறிக்கை தி. மு. க.வினரிடம் ஏற்படுத்துகின்ற 'சமிக்கை'யைப்பொறுத்தே அவர் 'உம்' நிலைக்கு இறங்க நினைப்பார்;

இரண்டாவது; காமராஜர் காங்கிரசில் ஒரு பகுதியினர் மகாதேவன் பிள்ளையின் தலைமையில் காங்கிரஸ் எனும் பெயரோடு புதிய காங்கிரசில் இணைந்தது போல, கருணாநிதி நீக்கப்பட்டு வேறு ஒரு தலைமையில் தி. மு. க.வின் ஒரு பகுதியினராவது தி. மு க. என்றபெயரோடு அ. தி. மு. கவுடன் வந்து இணையலாமென அவர் எதிர்பார்க்கலாம். "கலைஞர் தலைமைப்பதவியை விட்டு நீங்கவேண்டு"மென்ற பண்ருட்டி ராமச்சந்திரனின் அறிக்கையை அவதானிக்கும்போது எம். ஜீ. ஆர். அப்படி எண்ணியிருக்கலாமெனக் கருத என்னமுண்டு. "ஊழல் குற்றம், கழகத்தின் மீது அல்ல. தனிப்பட்டவர்களின் மீது தான் சுமத்தப்பட்டுள்ளது. எனவே நாங்கள் கழகத்தை விட்டு வெளியேறமாட்டோம்" என்ற முன்னாள் அமைச்சர் ராமச்சந்திரனின் கூற்றை அவதானித்துப் பார்த்தால் அதில் ஏதோ மர்மமிருக்கலாமெனக் கருத இடமுண்டு.

மூன்றாவது; இத்தகைய ஒரு இணைப்பு சாத்தியமாகாதபோது தமிழ் நாட்டில் தனது கட்சியை மேலும் ஸ்தரப்படுத்த எம்.ஜி ஆர். விரும்புகிறார். சர்வாதிகார ரீதியாக பதவி நீக்கம்செய்யப்பட்டு, தடை உத்தரவு காரணமாகப் பலவீனப் படுத்தப்பட்டுள்ள தி. மு. கவை விட, இன்றைய சூழ்நிலையில் தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரசுக்குள்ள பெரிதடை அ.தி.மு.கதான். இந்த நிலையிலே இந்திராவுக்கு எதிராக தமிழ் நாட்டில் ஆட்சியமைக்கக்கூடிய வகையில் தனது கட்சியை தயார்படுத்த அவர் விரும்பலாம். அதனால் தான் அவர், 'தனிப்பட அரசு அமைக்கக் கூடிய விதத்தில் அ. தி. மு.க வுக்கு தொகுதிகள் ஒதுக்கக் கூடியவிதத்தில்கூட்டுச்சேர' விரும்புபவர்களுக்கும் அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

இந்த மூன்று வழிகளையும் நன்கு அவதானிக்கும்போது தமிழ் நாட்டில் இந்திராவுக்கு எதிரான பெரிய சக்தி ஒன்றினைத் (அ. தி. மு. க. உட்பட) திரட்ட அவர் விரும்புவதாகவே தெரிகிறது. இதில் கடைசி இரு வழிகளையும் முதலில் ஆராய்ந்தால்; மூன்றாவது வழி எந்த விதத்திலும் புதுமையானதல்ல. ஏற்கெனவே தி. மு. கவுக்கு எதிராகவே அவர் அப்படி ஒரு கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

இரண்டாவது வழியைப் பொறுத்தவரையில் கலைஞரின் தலைமையை ஏற்க மறுப்பவர்கள் ஏற்கெனவே வெளியேறிவிட்டார்கள். எஞ்சியிருப்பவர்களில் பெரும்பான்மையினர் கலைஞர் வழியில் கழகத்துக்காக உயிரைக் கொடுக்கவும் தயாரானவர்கள். பண்ருட்டியின் முயற்சி பிசுபிசுக்கப் போகின்ற ஒன்றே தவிர செயலுருப் பெறக்கூடிய ஒன்றல்ல. இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் கழகத்தை வழிநடத்தக்கூடிய ஆற்றல் கலைஞரைத் தவிர வேறுயாருக்குமே இல்லை. எம்.ஜி. ஆரைப் போன்ற பொதுமக்களிடையேசெல்வாக்கு மிகுந்த ஒருவரை வெளியேற்றிய பின்பும், கழகத்தைக் கட்டிக்காக்க முடிந்ததென்றால் அது கலைஞர் போன்ற ஒரு திறமைசாலியால்தான் முடிந்தது. இதனை யாரும் மறுக்க முடியாது. இன்றைய நிலையில் கலைஞர் தலைமைப் பதவியை விட்டு நீங்குவதானால் அது தி. மு. க. என்ற பேரியக்கத்துக்குக் கட்டுகின்ற சமாதியாகத்தான் முடியும். அத்தகைய ஒரு முயற்சி ஒருபோதும் நடக்க முடியாது.

இனி முதலாவது விடயத்துக்கு வந்தால் அது சாத்தியமா? இல்லையா? என்பதல்ல பிரச்சினை. சாத்தியமாக வேண்டிய ஒன்று சாத்தியமாகியே தீரவேண்டும். எம் ஜி. ஆரைப்போன்ற பொது

## அண்ணாவின் பெயரால் பிரிந்த சக்திகள் அனைத்தும் மீண்டும் ஒன்றிணையவேண்டும்!

மக்கள் செல்வாக்குள்ள ஒருவரும், கலைஞரைப் போன்ற திறமையான தலைமையும் ஒன்றிணைந்து செயலாற்றத் தவறினால், இந்திராவின் சர்வாதிகாரப்பிடியில் சிக்கித் தடுமாறும் தமிழ் நாட்டை யாராலுமே காப்பாற்ற முடியாது போய்விடும். எம். ஜி. ஆரின் இந்த விவேகமான அறிக்கையை வெறுமனே ஒரு மனமாற்றமென ஒதுக்கிவிடமுடியாது. இரு காங்கிரசின் இணைப்பின் எதிரொலியால் ஏற்பட்ட கருத்து மாற்றமென்றே கருதவேண்டும். திராவிட சக்திகளிடையே இன்று ஏற்படவேண்டிய இறுக்கமான பிணைப்பினை அவர் நன்கு உணர்ந்துள்ளார் என்றே கொள்ளவேண்டும்.

எம். ஜி. ஆரின் இந்த அறிக்கை நிச்சயமாக தி. மு. கவினரின் மனக்கதவைத் தட்டாதிருக்க முடியாது. இணைப்பின் அவசியத்தை, தனித்து நின்று அடுத்து ஆட்சிக்கு வரமுடியுமெனக் கூறப்பட்ட அ.தி.மு. கவின் தலைவர் உணர்ந்துள்ள அளவுக்கு, சாணக்கியன் முதல சர்ச்சில் வரையுள்ள சிறந்த ராஜதந்திரிகளுக்கு ஈடாகப் போற்றிப் புகழப்படுகின்ற கலைஞர் கருணாநிதி உணராதிருக்கமுடியாது. தமிழகத்தைப் பிடித்துள்ள இந்தக் கஷ்டமான சூழ்நிலையிலே தனிப்பட்ட பிரச்சினைகளை மறந்து மிகுந்த நிதானத்துடனும், பொறுப்புணர்ச்சியுடனும், செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை இரு தலைவர்களும் நன்கு உணருவார்கள் என்றே நம்புவோம்.

எம். ஜி. ஆருக்கு பொது சனச் செல்வாக்கும், ஓரளவு கறைபடாத கரமுமிருப்பதனை ஒப்புக்கொள்ளும் போது; கலைஞரின் நிர்வாகத் திறமையையும், முற்போக்கான திட்டங்களையும், அவற்றை செயற்படுத்துகின்ற வேகத்தையும், அப்படிச் செயலாற்றவேண்டுமென்றதுடிப்பு 'வெறி'யாக மாறிவிட்ட விந்தையையும் பார்த்து இந்த மனிதருக்கு இவ்வளவு சக்தியா எனப் பிரமிக்க வேண்டியுள்ளது. இப்பகுதியாரின் நிறைகளையும் ஏற்றுக்கொள்ளும் போது, அவர்களின் குறைகளையும் மறுப்பதற்கில்லை, அந்தப் பலவீனங்கள்தான் தி. மு க. பிளவுபட்டதற்கும், இன்று தமிழ் நாட்டில் இத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்பட்டதற்கும் காரணங்கள் என்பது உண்மையே;

எனவே இருபகுதியாரும் தங்கள் பலங்களைப் புரிந்துள்ளதுபோலவே பலவீனங்களையும் புரிந்து கொண்டு இடையிலேற்பட்ட கசப்பான நிகழ்ச்சிகளை மறந்து மீண்டும் ஒன்றுபடவேண்டும். இதில் யார் யாருடன் சேருவது என்பதல்ல பிரச்சினை. இதுபற்றி நாம் கருத்துத் தெரிவிப்பதற்குமில்லை. இருபகுதியாரும் ஒரே தலைமையின் கீழ் இணைவது என்பதனை ஏற்றுக்கொண்டால் இத்தகைய அர்த்தமற்ற கேள்விகளுக்கு இடமேயில்லை.

பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு எலும்புகளும் நரம்புகளும் இரத்தமும் வியர்வையும் காணிக்கையாகக் கொடுத்து, ஆயிரமாயிரம் உயிர்த்தியாகத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட தி. மு. க. மீண்டும் தமிழகத்தில் இறுக்கமாக வேரோடி ஒன்பது ஆண்டுகளல்ல தமிழகமுள்ள காலம் வரை ஆட்சி புரியத்தக்க விதத்திலே அண்ணா சமாதியிலே கூடி "இனி மேல் தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக இயக்கத்தை ஒருபோதும் சிதறடிக்க மாட்டோம்" என அண்ணாமீது ஆணையிட்டு இணைகின்ற அந்தப் பொன்னான நாள் விரைவாக வரவேண்டும். தமிழகத்தார்மட்டுமன்றி உலகத் தமிழர்கள் அனைவரும் மகிழும் வகையில் அத்தகைய ஒரு இணைப்பை ஏற்படுத்தத் தலைவர்கள் முயலவேண்டும். இல்லாவிட்டால் இனியும் "அண்ணாவின் 'இதயக்கனி'" என்றோ, "இதயம் தந்திடு அண்ணா என்று கேட்டு அண்ணாவின் இதயத்தைப் பெற்று வைத்திருக்கிறேன்" என்றோ தலைவர்கள் கூறிக்கொள்வதிலே அர்த்தமே இல்லாமல் போய்விடும்.

சுயாட்சிதாசன்

---

## அண்ணா பிறந்திலரேல்...!

("மணிக்கவிராயர்")

'அண்ணா' எனும் தமிழன்
அன்று பிறந்திலரேல்...
கண்ணான தமிழ் நாடு
கண்டிருப்போமா—நாம்?
அண்ணா எனுந் தமிழன்
அன்று பிறந்திலரேல்...
இனிக்கும் 'தமிழ் ஆட்சி'
எங்கே கண்டிருப்போம்?
அண்ணா எனும் தமிழன்
அன்று பிறந்திலரேல்...
'கருணா'நிதி யெமக்கு
கிடைத்திருக்க வழியில்லை!
அண்ணா எனும் தமிழன்
அன்று பிறந்திலரேல்...
'அண்ணா யிசம்' ஒன்று
தோன்றியிருக்காது!
அண்ணா எனும் தமிழன்
அன்று பிறந்திலரேல்...
தொண்டைக்குள் 'இந்தி'
திணிக்கப் பட்டிருக்கும்!
அண்ணா எனும் தமிழன்
அன்று பிறந்திலரேல்...
அடுக்கு மொழி ஏது?
அழகு தமிழ் நடை ஏது?
தீண்டாமை—அறியாமை
புரையோடிப் போயிருக்கும்!
கடமை என ஒன்றும்
கட்டுப்பாடொன்றும்
கண்ணியம் மற்றொன்றும்
எனும்—
மூன்று கட்டளையும்
அண்ணா பிறந்திலரேல்...
எவ்வண் டைத்திருக்கும்?
அண்ணா எனும் தமிழன்
அன்று பிறந்திலரேல்...
தமிழன் எனு முணர்வு
தரங் கெட்டுப்
போயிருக்கும்!
ஆகையினால்—
அண்ணா ஒரு பேராற்றல்!
அண்ணா ஒரு பேரறிஞர்!
அண்ணா ஒரு சக்தி!
அண்ணா ஒரு காலம்!

---

## தமிழ் இளைஞர் பேரவை வவுனியா வடக்குப் பிரிவு மத்திய கிளை

வவுனியா வடக்குப் பிரிவிலுள்ள தமிழ் இளைஞர் பேரவைக் கிளைகளின் மத்திய கிளை ஒன்று அண்மையில் நெடுங்கேணி இ. மு. சங்க மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது மேற்படி பிரிவிலுள்ள —நெடுங்கேணி—மாங்குளம் — கனகராயன்குளம் — புளியங்குளம் போன்ற பகுதிகளில் இருந்து இளைஞர் பேரவை உறுப்பினர்கள் வருகை தந்தார்கள். மேற்படி கிளை நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: சி. கணேசமூர்த்தி, உபதலைவர்; வ. பூபாலசிங்கம், பொதுச்செயலாளர்; பொன். பத்மநாதன், துணைச் செயலாளர் ச. க. சிவலிங்கம், பொருளாளர்: மு. பரமநாதன். ஏழுபேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு கோடி இதயங்களின் இன்றைய ஏக்கம்!

அன்பு நண்பா,

இரண்டு கிழமைகளாக உனக்கு மடல் தீட்டி மகிழ்ந்திட முடியவில்லை; தீட்டிடாததற்கு காரணம் உனக்குப்புரிந்திருக்கும்! என் எண்ணங்களை, என் சிந்தனைகளை, எவ்வித தடையுமின்றி எடுத்துக்கூறிடும் வாய்ப்பை இழந்த நிலையில் எதனைத்தான் நான் உனக்குக் கூறிடமுடியும்? 'சூழ்நிலையின் கைதி' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை கூறினாரே—அந்த நிலையிலேதான் நான் இருக்கிறேன்! எழுதவேண்டிய கருத்துக்களைத்தான் எழுதக்கூடிய நேரத்தில் எழுதவேண்டிய அளவுக்கு உனக்கு வாரம் தவறாமல் எழுதிவிட்டேனே! உன் உள்ளத்து உணர்வுகள், ஆர்வங்கள், அபிலாஷைகள், இலட்சியங்கள் அனைத்தும் எனக்குப் புரியும்; என் எண்ணக்கிடக்கைகள், உணர்வுகள், இலட்சியங்கள் அபிலாஷைகள் அனைத்தும் உனக்குப் புரியும்; எனவே நம் உள்ளங்கள் உறவாடுதலை—நம் உணர்வுகள் ஒன்று கலத்தலை யாரால் தடுத்திடமுடியும்? அவற்றை இனியும் உனக்கு எழுதியா காட்ட வேண்டும்?

என்னுடைய எண்ணமெல்லாம், என்னுடைய சிந்தனையெல்லாம் தமிழ் நாட்டில் இப்போது நடைபெற்றுவரும் இந்தி ஏகாதிபத்தியத்தின் வெறிக்கூத்தைப்பற்றியதாகவேயிருக்கிறது; தமிழ் நாட்டில் பெரியாரும்,பேரறிஞர் அண்ணாவும், பன்னீர் செல்வமும், அஞ்சா நெஞ்சன் அழகிரியும், தாளமுத்து நடராசனும் தங்கள் தேக்குமர உடலைத் தீக்குத் தந்து தமிழ்காத்த சின்னச்சாமியும், சிவலிங்கமும், இன்னும்,பல்லாயிரவரும் தங்கள் வாழ்வையே பலிதந்து கட்டியெழுப்பிய தமிழ்த்தேசிய உணர்வை—அந்த உணர்வின் நிலைக்களனாக விளங்கும் திராவிட முன்னேற்றக்கழகத்தை—அழித்தொழித்து விடுவதென ஆதிக்கவெறியர்கள் ஆங்காரம் பிடித்து அலறுகின்ற காட்சியை தமிழகம் இன்று கண்டுகொண்டிருக்கிறது! உலகத் தமிழர்களின் இதயங்கள் எல்லாம் இதுகண்டு இன்று குமுறிக்கொண்டிருக்கின்றன.

தமிழன் யாருக்கும் தாழாமல் யாரையும் தாழ்த்தாமல்எவரையும் சுரண்டாமல், யாராலும் சுரண்டப்படாமல்—யாருக்கும் எசமானனாக இல்லாமல்—உலகில் எவருக்கும் அடிமையாகவும் இல்லாமல் நல் வாழ்வு வாழவேண்டுமென்பதையே நோக்கமாகக்கொண்டு தமிழ் நாட்டின் உயர்வுக்கு உழைத்திட அண்ணா உருவாக்கிய தமிழ்த்தேசிய இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குமாசு கற்பிப்பதிலே கழகத்துக்கு கறைபூசுவதிலே—தமிழ்ப் பகைவர்கள் அனைவரும் தமிழகத்திலே இன்று கைகோத்தபடி ஒற்றுமையுடன் செயற்பட்டு வருகிறார்கள்!

1967ம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவால் தொடக்கிவைக்கப்பட்டு பின் கலைஞர் கருணாநிதியினால் தொடரப்பட்ட ஒன்பதாண்டு காலத் தி. மு. க. ஆட்சியில் தமிழும், தமிழினமும், தமிழகமும் அடைந்த வளர்ச்சிகண்டு பொறாமைத்தீயில் வெந்தோர்—பொச்சரிப்பு அடைந்தோர் — வைதீகபுரியினர் — மேட்டுக்குடியினர்—முதலாளித்துவ பத்திரிகை முதலாளிகள் அனைவரும் ஒன்று திரண்டு கழகத்தை வேரோடு சாய்க்கும் வீண் முயற்சியிலே இன்று ஈடுபட்டிருக்கிறார்கள்!

நாலரைக்கோடி தமிழர்களின் ஆட்சியை நசித்துவிட்டு—வட இந்திய ஆதிக்கத்தை தமிழகத்திலே புகுத்திய இந்திரா காந்திக்கு ஆலவட்டம் வீசி, அடிதொழுது தெண்டனிட்டு, நிலபாவாடை விரித்து சாஷ்டாங்கமாக தெண்டனிட தமிழகத்தில் பல இழி பிறவிகள் இருக்கும்போது, தமிழினத்துக்கு எங்கேதான் வாழ்வு?

தி. மு. க. அரசைக் கலைத்துவிட்டு—இப்போதுதான் கலைத்ததற்கான காரணங்களைக் கண்டு பிடிப்பதிலே திருமதி இந்திரா காந்தியார் ஈடுபட்டிருக்கிறார் என்பதை அவரது பேச்சுக்கள் துலாம்பரமாக எடுத்துக் காட்டிவிட்டன!

ஆரம்பத்தில், ஊழல் என்றார்; அதிகார துஷ்பிரயோகம் என்றார்; தனது கட்சிக்காரர்களுக்கு மட்டும் தி, மு, க சலுகையளித்தது என்றார்; எதிர்க்கட்சிகளை கருணாநிதி நசித்தார் என்றார்; அவசரகாலச் சட்டத்தை அமுல் நடத்துவதில் கழக அரசு ஒத்துழைக்கவில்லையென்றார்; மத்திய அரசின் 21 அம்சத் திட்டத்தை அமுல் நடத்த வில்லையென்றார்; தமிழகத்தில் நிர்வாகம் சீர்குலைந்துவிட்டதென்றார்!

பின்னர், மாநில சுயாட்சிப் போர்வையில் கழக அரசு தமிழ் நாட்டுப்பிரிவினைப் பிரசாரம் செய்ததென்றார்!

அடுத்து—தி. மு. க. மூன்று நாள் வன்முறைப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டிருந்தது என்று புதிய கப்சாவை அவிழ்த்து விட்டார்!

கடைசியாக—இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தி. மு, க. தலையிட்டு விட்டதென்று கூறியிருக்கிறார்!

இவ்வாறு இந்திரா அம்மையார் ஜனநாயகத்தைப் படுகொலை புரிந்துவிட்டு, அந்தக் கொலையை மூடி மறைத்திட நாள்தோறும் ஒவ்வோர் காரணங்களை கற்பனையில் உருவாக்கி வெளியிட்டுக்கொண்டேயிருக்கிறார்!

உண்மையில் தி. மு. க. அரசு கவிழ்க்கப்பட்டதற்குக்காரணம்—ஊழல் அல்ல; ஊழலாக இருந்தால், எம். ஜி. ஆர், இந்திராவிடம் ஊழல் பட்டியல் கொடுத்தபோதே தி. மு. க. அரசு மீது நடவடிக்கை யெடுத்திருக்கலாம்; ஆனால் அப்படிச்செய்யவில்லை; ஆனால் 'மாநில சுயாட்சி'க்கோரிக்கையை முன்வைத்து தமிழ் நாட்டின் உரிமைக் குரலை தி. மு. க. அரசு

## அரசியல் மேடை

ஓங்கி ஒலித்த காரணத்தினாலேதான் — தமிழ் தேசிய உணர்வை கழக அரசு தட்டியெழுப்பிய காரணத்தினாலேதான்—தி. மு. க. அரசு இன்றையதினம் கலைக்கப்பட்டு—தி. மு. கழகத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டு காராக்கிருகத்துள் தள்ளப்படுகிறார்கள்! இந்த ஜனநாயகப் படுகொலைக்கு 'ஊழல்' ஓர் போர்வையாக்கப்பட்டிருக்கிறது; அவ்வளவுதான்!

இந்திராகாந்தியார் கூறுகிற காரணங்களை மறுத்திடவோ உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துரைத்திடவோ முடியாத நிலையில் தி. மு. கழகம் அங்கு இருக்கிறது!

பல்லாயிரக்கணக்கான தி. மு. க. தொண்டர்கள், தலைவர்கள், பா. உ.க்கள், இருட்சிறைக்கோட்டத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர்!

கூட்டங்கள் வைப்பதற்கு, கருத்துக்களை வெளியிடுவதற்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது!

கடுமையான பத்திரிக்கைத் தணிக்கை இந்தியாவில் அமுலில் இருக்கிறது!

இந்நிலையில்இந்திரா காந்தியும் அவருக்கு ஜால்ரா போடுவோரும் கூறுகின்ற கருத்துக்களை மட்டுமே மக்கள் அறியமுடிகிறது! கழகம் தனது நிலையை நாட்டு மக்களுக்கு விளக்கமுடியாத இக்கட்டான நிலையில் இன்று இருக்கிறது!

எனவேதான்நண்பா இந்தச்சூழ்நிலையைப் பயன்படுத்தி தமிழ்ப்பகைவர்கள், இன்று தமிழகத்தில் கொட்டமடிக்கிறார்கள்! வைதிகபுரியினர் இன்று வாலாட்டுகிறார்கள்! ஆனால் "பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால் கீச்சுக் கீச்சென்னுமாம் கிளி" என்பார்களே, அதுபோல— கழகத்தலைவர் கருணாநிதியும் ஏனைய தலைவர்களும் மனம்விட்டு பேசத் தொடங்குகிறபோது இந்தத் துரோகிகள் முக்காடிட்டு ஓடுகின்ற நிலை தமிழகத்தில் ஏற்படப் போவதை நாம் இருந்து பார்க்கத்தான் போகிறோம்!

தமிழ்ப் பகைவர்கள் என்னதான் ஓலமிட்டாலும் அண்ணாவும், அவருக்குப்பின் கலைஞர் கருணாநிதியும், கழக அரசும்,தமிழினத்தின் ஏற்றத்துக்கும், தமிழ்மொழியின் உயர்வுக்கும் ஆற்றிய பெரும்பணியை தமிழ் நாட்டு மக்கள் மறந்தாவிடுவார்கள்?

தி. மு. கழக ஆட்சியிருந்திருக்காவிட்டால், அகில உலகமும் புகழத்தக்க வகையில் 1968ம் ஆண்டு உலகத்தமிழ் மாநாடு அத்தனை சிறப்புடன்—தமிழ் கூறும் நல்லுலகு இதற்கு முன் என்றும் கண்டும் கேட்டுமிராத அளவுக்கு—தமிழன்னை மகிழும் அளவுக்கு—நடைபெற்றிருக்கமுடியுமா?

'சென்னை மாநிலம்' — தமிழ் நாடாகியது!

தமிழில் பெயர்ப் பலகைகள்!

பேருந்துகளுக்கு தமிழ்ப்பெயர்! அவற்றில் திருக்குறள்!

ஆலயங்களில் தமிழ்!

ஆட்சிமன்ற மொழியாகத் தமிழ்!

நீதிமன்ற மொழியாகத் தமிழ்!

பழந்தமிழ் பெருமையைப் பறைசாற்றும் புதிய பூம்புகார், சிலப்பதிகாரக்கலைக்கூடம்!

கட்டபொம்மன் கோட்டை

கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை,

சென்னையில் வள்ளுவர் கோட்டம்!

தியாகிதில்லையாடி வள்ளியம்மை பெயரில் நகர்!

தமிழ் வளர்ந்த சங்கப்புலவர்கள் பிறந்த ஊர்களில் நினைவுச் சிலைகள்!

இராசராச சோழனுக்கு நினைவுச் சிலை!

இப்படி, எல்லாம் தமிழாய்; எதிலும் தமிழாய் —எதுவும் தமிழாய்—தமிழின உணர்ச்சியின் வடிவமாய் செயற்பட்டு— இல்லாதாரை ஏழைகளை—பிற்படுத்தப்பட்ட மக்களை—சேரி வாழ் மக்களை—கை தூக்கிவிட்டு— ஏழைகளின் கண்ணீரைத்துடைத்து, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்ட கழகஅரசைத்தான் இன்று கலைத்துவிட்டு குதர்க்கம் பேசுகிறார் இந்திரா காந்தி! அவரைக் கும்பிட்டு வரவேற்கிறார்கள் தமிழ் நாட்டு விபீஷணர்கள்!

தி. மு. கழகம் நீண்ட வரலாற்றைக் கொண்டது; இந்த நீண்டபாதையில் எத்தனையோ எதிர்ப்புக்களை, நெருக்கடிகளை, சோதனைகளை, வேதனைகளை, சிறைச்சாலைச் சித்திரவதைகளை, தடியடிகளைச் சந்தித்து—கண்ணீரும் செந்நீரும் சிந்தி — எத்தனையோ உயிர்ப்பலிகளை கொடுத்துத்தான்—நாலரைக்கோடி தமிழ் மக்களின் நெஞ்சத்தில் அது இடம்பிடித்து ஆட்சியிலும் அமர்ந்தது;அண்ணா தந்துசென்ற அறிவுரைகளும்,அவர் வளர்த்துவிட்ட குடும்ப பாசமும், அவர் தந்து சென்ற கடமை கண்ணியம் கட்டுப்பாடு, எனும் முப்படைகளும் இன்றைய நெருக்கடிகளைச் சமாளித்து கழகம் மேலும் தனது இலட்சியப்பாதையில் முன்னேறுவதற்கு நிச்சயம் உதவவே செய்யும்!

ஆனால் கழகத்துக்கு நெருக்கடி நேர்ந்துள்ள இந்த நேரத்தில், கழகத்தினால் உருவாக்கப்பட்ட சிலர், கழகம் பதவியிலிருக்கும் போது அதில் குளிர்காய்ந்த சிலர், இன்று கலைஞர் மீது பழி சுமத்திவிட்டு, கழகத்தையும் கலைஞரையும் விட்டு நழுவிக்கொண்டிருப்பதையும் நாம் கண்ணுரப்பார்த்துக் கொண்டிருக்கிறோம்! வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறோம்!

கேட்டிலுமுண்டோர் உறுதி
கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்

என்று வள்ளுவன் கூறியதுபோன்று கழகத்துக்கு — குறிப்பாக கலைஞருக்கு — தீமையிலீது ஓர் நன்மையென்றே கூறவேண்டும்!

— 5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி நேரத்தில்

# ஒற்றுமையே அவசியம்!

—4-ம் பக்கத் தொடர்

**பேரறிஞர் அண்ணாவினால் உருவாக்கப்பட்டவர்கள்—உண்மையிலே அண்ணா உருவாக்கிய இலட்சியத்திலே அழுத்தமான நம்பிக்கையுடையவர்கள்—அனைவரும் ஒன்றுபட வேண்டிய நேரம் இது!** அண்ணாவின் அந்த இலட்சியம்தான் என்ன? 1966ம் ஆண்டு (30-12-66) விருகம்பாக்கம் மாநாட்டில் தி.மு. கழகத்தின் நோக்கம் என்ன வென்பதை அவரே கூறியிருக்கிறார்:-

"தரணிபுகழ வாழ்ந்திருந்து—புகழ்பெற்றது, தமிழ் மரபு! மற்ற நாடுகள் எல்லைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு—எல்லையில் ஏற்படும் தொல்லைகளை நீக்கியதற்கும் முன்பு—அவர்கள் அரசு என்ற ஒன்று ஏற்படுத்துவதற்கும் முன்பு—அரச நீதிகளை வகுப்பதற்கும் முன்பு—காடுகளில் அவர்கள் உலாவிக்கொண்டிருந்தபோது—உலகமே வியந்து உச்சிமேல் வைத்து மெச்சத்தக்க அரசியல் நெறி பெற்றுத் திகழ்ந்தது தமிழகம்!

"நமது மூதாதையர் யவனம்வரை தொடர்புகொண்டிருந்தனர்—நமது மூதாதையர் சீனம்வரை சென்று திரும்பினர்—தூர கிழக்கு நாடுகளில் கலாச்சாரத்தொடர்பு மேற்கொண்டிருந்தனர்!

"அந்த உன்னதமான தமிழ் மரபுக்கு ஏற்றவகையில் நம்மைத் தயார்படுத்திக்கொள்ளக் குறைந்த அளவு 50 ஆண்டுகளாவது ஆகும்!

"இன்னும் நமது மொழியை இலக்கியச் செறிவுள்ளதாக ஆக்கி—நமது பொருளாதாரத்தைச் சீராக்கி—உரிமைகளை நிலைநாட்டி—இந்த நாட்டுத் தமிழர்களைத் தமிழ்ப்பரம்பரைக்குச் சொந்தக்காரர்களாக்க இன்னும் 50 ஆண்டுகளாவது ஆகும்!

"வெறும் அரசியல் நடத்த—67ல் ஆட்சி அமைக்கமட்டும் நமது கட்சி இருக்கிறது என்று நினைக்காமல்—67க்குப் பிறகும்தொடர்ந்து 50 ஆண்டுக் காலத்திற்காவது நமது பணி இருக்கிறது என்ற கடமை உணர்ச்சி நம்மனதில் ஆழப்பதியவேண்டும்!

"1967—மட்டும் நம் கண்முன் நிற்பதென்றால்—67ல் ஆட்சிபீடம் ஏறுவது மட்டும் நமது நோக்கம் என்றால்—அதற்கு யாரைப்பிடிக்க வேண்டுமோ அவர்களைப்பிடித்து—எதைக் கொடுக்கவேண்டுமோ அதைக்கொடுத்து—யாரை அணைத்துப்பேசவேண்டுமோ அவர்களை அணைத்துப்பேசினால், அது ஒன்றும் முடியாத காரியமல்ல!

"ஆகவே அமைச்சரவையை அமைப்பது மட்டுமல்ல நமது நோக்கம்.

"தமிழ் மக்கள் மரபைப்புரிந்துகொண்டு தமிழ் வரலாற்றைப்புரிந்து கொண்டு—புது வரலாற்றைப், புதிய செய்தியை, புதிய பண்பை உலகுக்கு வழங்கவேண்டும் என்பதற்குத்தான் நாம் பணியாற்றுகிறோம்.

"ஐக்கிய நாடுகள் சபை என்று உலகிலுள்ள நாடுகளை எல்லாம் ஒன்று சேர்த்து—எல்லாக்கொடிகளையும் பறக்கவிட்ட பிறகும் சர்வதேச ஒற்றுமையைச் சில நேரங்களில் காணமுடியாமல் நாம் தத்தளிக்கிறோம்.

"ஆனால், இந்த உலக ஒருமைப்பாட்டை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அரியதோர் கருத்தை—தமிழ் மரபு தந்தது.

"அது மட்டுமல்ல; "ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!"—என்று தமிழர்கள் தரணியாண்ட காலத்திலேயே தமிழகம் கூறியது,

"இவைபோன்ற கருத்துக்களை—பண்புகளை மீண்டும் தமிழகம் உலகுக்குக் தர வேண்டும்.

"அப்போதுதான் தமிழினம் தலைநிமிர்ந்து வாழும்; புதிய வரலாற்றை—புதிய அத்தியாயத்தைச் சமைக்கும்!

"அவ்விதம் சமைக்கத்தக்கவாறு தமிழினத்தை ஆக்கும் பொறுப்பு—காலத்தின் கரத்தாலே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது!

"ஆகவே, தமிழ் மரபு காப்போர் அமர வேண்டும் என்பதற்காகவே தி. மு. கழகம் ஆட்சியில் அமரவேண்டும் என்கிறோம்!

'தமிழ் இனம்—தமிழ் மொழி—தமிழ் மரபு—இவைகளைக்காப்பாற்றும் புதிய அரசு, புதிய ஆட்சிதமிழ்நாட்டில்தோன்றவேண்டும்!'

எனவே அண்ணாவின் மேற்கண்ட இலட்சியத்தை—அண்ணாவின் இந்தக் கட்டளையை—நிறைவேற்றிடத் தி. மு. கழகத்தினர் அனைவரும், தமக்குள் இருக்கும் வேற்றுமைகளை மறந்து இந்த நெருக்கடி நேரத்தில் ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்பதே ஈழத்தமிழனின் ஆசையென்பதை 35 இலட்சம் தமிழர்களின் சார்பில் கூறி வைக்கவிரும்புகிறேன்!

இது ஈழத்தமிழனின் ஆசைமட்டுமல்ல—ஆறுகோடி உலகத்தமிழர்களின் ஆசையும் இதுதான்! தமிழ் இரத்தம் ஓடும் ஒவ்வொருவனின் ஆசையும் இதய ஏக்கமும் இதுதான்! தி. மு. கழகம் வாழ்ந்தால்தான் தமிழ்வாழும்; தமிழினம் வாழும்; தமிழ் மரபு வாழும்; தமிழ் தேசியம் வாழும்!

ஆம்— தீதும் நன்றும் பிறர்தர வாரா!
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

## சிறுகதை அனுப்புங்கள்

மன்னார் ம. ஜூசைநாயகம் வெளியிட்ட "இலங்கை வேந்தன்" எனும் இராவணன் புதிய நோக்கு இலக்கிய நாடகம் எழுதுவதற்கு மூலகாரணமாகஇருந்த திருகோணமலையைச் சேர்ந்த திரு. த.அமரசிங்கம்—ஈழத்தின் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக "ஈழத்து இலக்கியச்சோலை" எனும் இலக்கியவெளியீட்டுஸ்தாபனத்தின் மூலம் சிறுகதைத் தொகுப்புகளை வெளியிடும் பணியிலே ஈடுபட்டுள்ளார். இவர் முயற்சியின் பயனாக இரண்டு வருடங்களுக்கு முன்பாக "ஒற்றைப்பனை" எனும் சிறுகதைத்தொகுப்பு வெளிவந்துள்ளது. தற்பொழுது அகில இலங்கையிலும் உள்ள எழுததாளர்களின் சிறுகதைப்படைப்புகளை மாவட்டத்திற்கு ஒரு கதையாகத் தேர்ந்தெடுத்து அவரது இரண்டாவதுவெளியீட்டை வெளியிடத் திர்மானித்துள்ளார். இதற்கு ஆதரவாக அகில இலங்கையிலும் உள்ள எழுத்தாளர்களிடமிருந்து சிறுகதைகளை அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறார்.

சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

திரு. த. அமரசிங்கம்
"ஈழத்து இலக்கியச்சோலை"
21, ஔவையார் வீதி,
திருக்கோணமலை.

## நவரத்தின சிங்கம் மறைவு!

மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்க முன்னாள் தலைவரும் தமிழ்தொழிற் சங்க இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவருமான திரு. க. நவரத்தினசிங்கம் அவர்கள் 18-2-76 புதன் கிழமை மாலை சடுதியாக இருதய நோயினால் காலமானார். தமிழர் கூட்டணியின் தீவிர ஆதரவாளராக விளங்கிய இவரது இழப்பு, இயக்கத்துக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு, இவரது ஈமக்கிரியைகள் 20-2-76 வெள்ளிக்கிழமை கரவெட்டியில் நடைபெறுகிறது. அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

## பட்டிருப்பு தொகுதி தமிழர் கூட்டணி கிளைக்கூட்டம்

பட்டிருப்புத்தொகுதியின் தமிழர் கூட்டணி மத்திய கிளைக் கூட்டம் 22-2-76 ஞாயிறன்று பிற்பகல் 2 மணிக்கு களுவாஞ்சிக்குடியிலுள்ள அமரர் இராசமாணிக்கம் அவர்களின் இல்லத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் சாவகச்சேரி பா. உ.வும் பட்டிருப்புத் தொகுதியின் தற்காலிக தமிழர் கூட்டணி அமைப்பாளருமான திரு. வி. என் நவரத்தினம் கலந்துகொள்கிறார்.

## உப்புவெளி கிராம சபைத்தலைவர் மறைவு!

திருகோணமலை தமிழர் கூட்டணிக்கிளை உறுப்பினரும் உப்புவெளிக் கிராம சபைத் தலைவருமான திரு. பொ. சீவரத்தினம் அண்மையில் காலமானார். இவரது பூதவுடலுக்கு உப்புவெளிக் கிராமசபை கட்டிடத்தில் வைத்து பல நூற்றுக் கணக்கானோர் இறுதி அஞ்சலி செலுத்தினர். திருகோணமலை பா. உ. திரு. பா. நேமிநாதன், மூதூர் பா. உ. திரு. தங்கத்துரை ஆகியோரும் தமிழர் கூட்டணி, தமிழ் இளைஞர்பேரவைப் பிரமுகர்களும் மறைந்த தொண்டருக்கு இறுதி அஞ்சலியை செலுத்தினர். உதயசூரியன் கொடி பொறித்த மலர் வளையம் ஒன்றும் சாத்தப்பட்டது. திருமலை இந்து மயானத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்றன. மறைந்த அன்பரின் ஆத்மாசாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

## மன்னாரில் கருத்தரங்கு!

உயிலங்குளம், அடம்பன், மன்னார் ஆகிய இடங்களில், ஆங்காங்குள்ள தமிழ் இளைஞர் பேரவைகளின் சார்பில் இம்மாதம் 27, 28ம் திகதிகளில் நடைபெறும் கருத்தரங்குகளில் சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம், அ- [illegible]

## செல்வக்குமார் ஆஸ்பத்திரியில் அனுமதி!

வெலிக்கடைச் சிறையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த செல்வக்குமார் எனும் இளைஞர் இப்போது கொழும்பு அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார் இந்த இளைஞருக்கு சலத்துடன் இரத்தமும் சேர்ந்து வெளியேறுகிறதாம்.

## திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி விழா;

வழமைபோலவே இந்த வருடமும் எதிர்வரும் 28-2-76 அன்று திருக்கேதீச்சரத்தில் மகா சிவராத்திரி விழா சிறப்புற நடைபெற திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை ஏற்பாடுகளை செய்துள்ளது.

## புத்தளத்தில் "தமிழ்ப்பணிமனை"

'தமிழ்ப்பணி மனை' என்ற பெயரில் கலை இலக்கிய ஆர்வலர் ஒன்றியம் ஒன்று புத்தளத்தில் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்க் கலை இலக்கிய, கலாச்சார வளர்ச்சிக்காக பயனுள்ள பல திட்டங்களை இவ்வொன்றியம் நடைமுறைப்படுத்தவுள்ளது. தமிழ்ப்பணி மனையின் முதல் நிகழ்ச்சியாக அண்மையில் புத்தளத்தில் கருத்தரங்கு ஒன்றும் நடைபெற்றது. 26, வடக்கு வீதி, புத்தளம் எனும் முகவரியில் இப்பணிமனை இயங்கும்.

துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப் பவுடர் பாவியுங்கள். பாவித்த 2மேலுறைகளை அனுப்பி சிவராத்திரி மகிமை என்ற புத்தகம் ஒன்றைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிகளில் பண்பாட்டுப் புரட்சி தொடர்கிறது!

# இரவு விருந்துகளிலும் இன்பத் தமிழ் முழக்கம்

கடந்த சில ஆண்டுகளாக பாடசாலை விழாக்கள் வைபவங்கள் மாணவர் போதனு மொழியிலேயே இடம்பெற வேண்டுமென்று மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பண்பாட்டுப் புரட்சி சாதனைக்கு மேல் சாதனைகளை நிலைநாட்டி வந்துள்ள பொழுதிலும் யாழ். மத்திய கல்லூரியைப் பொறுத்த மட்டில் கல்லூரி நிர்வாகத்தினர் ஐம்பதுக்கு ஐம்பது என்ற தமது கொள்கையையே விடாப்பிடியாகத் தொடர்ந்து கையாண்டு வந்தது தெரிந்ததே!

கல்லூரி மேல் நிலைப்பள்ளி மாணவரது வருடாந்த இரவு விருந்து நிகழ்ச்சிகளில் மாணவர் போதனுமொழியான தமிழ் மொழியில் ஐம்பதுவீத உரைகள் இடம்பெற்றுல் பதிலுக்கு ஆங்கில மொழியிலும் ஐம்பது வீதம் உரைகள் இடம் பெறச் செய்வதில். அவர்கள் கருத்தாக இருந்து வந்தனர் அதற்கு சிறிஸ்காந்தா. போன்ற முன்நாள் மாணவர் தலைவர்களும்உடன்பாடானவர்களாக இருந்து வந்தமையால் மாணவர்களது பண்பாட்டுப் புரட்சி யாழ். மத்திய கல்லூரியைப் பொறுத்தமட்டில் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றிபெற முடியவில்லை.

யாழ். மத்திய கல்லூரியின் சகோதர பாடசாலையான யாழ். வேம்படி மகளிர் கல்லூரியும், அதன் போட்டிப் பாடசாலையான சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் பண்பாட்டுப்புரட்சியை முற்போக்காகக் கொண்டு நடத்துவதில் முன்னணியில் திகழ்ந்தபோதும் யாழ். மத்திய கல்லூரி மாணவர்களால் அவர்களுக்குச் சமதையாகவேனும் ஈடுகொடுக்க இயலவில்லை.

யாழ். மத்திய கல்லூரிக்கும்—புனித யோவான் கல்லூரிக்கும் இடையே நடைபெறும் வருடாந்த நிகழ்ச்சியான கிரிக்கெட் பெரும் போட்டியின்போது ஒலிபெருக்கி அறிவித்தல் மற்றும் நேர்முக வர்ணனைகளையும், மெல்லிசையையும் தமிழ் மொழியில் முதன் முதலாக நிகழ்த்தியவர் என்ற வரலாற்றுப் புகழைத் தட்டிக் கொண்ட யாழ். மத்திய கல்லூரியின் முன்னுள் அதிபர் திரு. இ. சபாலிங்கம் அவர்களது நிர்வாகத்தில்தானும் நடைபெற முடியாதுபோன அரும்பெரும் சாதனையை தமிழர் கூட்டணியின் தலைவர்களுள் ஒருவரான வண்ணை(மார்க்)விசுவநாதன் மைந்தனும் மத்திய கல்லூரி மேல நிலைப்பள்ளி மாணவர் சங்கத்தின் தலைவருமான திரு. விசுவநாதன் உருத்திரகுமாரன் வெற்றிகரமாகச் சாதித்துள்ளார். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்ற கூற்றுக்குச் சான்றாக யாழ். உயர் நீதிமன்ற நீதியரசர் அல்காதி எம். எம். அப்துல் காதர் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இவ்வாண்டுக்கான இரவு விருந்தில் பந்திக்குப் பிந்திய தமது தலைமை உரையை ஆற்றுகையில் திரு. உருத்திரக்குமாரன் "நீதிமன்றங்களில் நம் தாய் மொழியாம் தமிழ் மொழியை நீதி நிர்வாக மொழியாகச் சிறப்பாகச் செயல்படுத்தும் சாதனையை நிலைநாட்ட இன்றைய விருந்தில் கலந்துகொள்ளும் மாணவர் பலர் விரைவில் சட்டத்தரணிகளாகவும் நீதியரசர்களாகவும் வருவர்" என்று உறுதி கூறினர்.

திரு. உருத்திரகுமாரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விருந்தில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து வீத உரைகளும் மாணவர் போதனுமொழியில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. வைபவத்துக்கு திருஷ்டி பரிசாரமாகப் போலும் யாழ். பரியோவான் கல்லூரி அதிபரின் உரை விதிவிலக்காக ஆங்கிலத்தில் இடம் பெற்றது. அவரைச் சொல்லிக் குற்றம் இல்லை. விருந்தினர்களுக்கு வாழ்த்துரையை முன்மொழிந்த செல்வன் ஆர் ரவிகுமாரன் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தியதாலேயே திரு. பூரணம் பிள்ளையின் பதிலுரையும் மரபு வழிபற்றி ஆங்கிலத்தில் இடம்பெற நேர்ந்தது. செல்வன் ஆர். ரவிகுமாரன் போன்றவர்கள் சக மாணவர்களது மானஉணர்வுக்குத் தடையாக இருக்கக்கூடாது என்பதுடன் பெரியார்களை புஇக்கட்டில்மாட்டிவிடக் கூடாது அவர் மட்டும் மாணவர் போதனு மொழியில் பேசியிருப்பாராகில், திரு. பூரணம்பிள்ளை அவர்களது உரையும் தமிழில் இடம்பெற்றிருக்கும். வைபவமும் நூற்றுக்கு நூறுவீதம் பண்பாட்டுப் புரட்சியில் வெற்றி சிறந்திருக்கும்.

சக பாடசாலைகளது இரவு விருந்துகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன. யாழ். மத்திய கல்லூரி விருந்து

## இன்பரசு

அவற்றிற்கு முன்மாதிரியாகத் திகழ அதன் குறைபாடும் படிப்பினையாக அமையட்டும். இரவு விருந்துகள் பற்றிஎழுதுகையில்இப்பருவகால விளையாட்டான கிரிக்கெட் பற்றியும் குறிப்பிட வேண்டும். பெப்ரவரி 4ல் பிரவாகித்த தமிழ் உணர்வு கிரிக்கெட் மைதானங்களையும் பற்றிக்கொள்ளத் தவறவில்லை. வீரர்களை ஊக்கி உற்சாகப்படுத்த தமிழ்மொழிப் பதங்களையே உபயோகிப்பது என்று மாணவர் உறுதி எடுத்திருக்கிறார்கள் போலும், மைதானங்கள் தோறும் தூய தமிழ்ச் சொற்களாலே மாணவர் தமது வீரர்களை உற்சாகப்படுத்தி வருகிறார்கள். இதில் யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்து, மகாஜனக் கல்லூரி போன்றவை முன்னணியில் நிற்கின்றனர் புனித. யோவான். யாழ். மத்திய கல்லூரி சம்பத்தரிசியார் கல்லூரிகளது மாணவர் தூய தமிழில் சுலோகங்கள் சொல்லத் தமது பெரும் போட்டிகளை எதிர்நோக்கிஇருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை கிரிக்கெட் மோதல்கள் இன்னமும் சூடுபிடித்திருப்பதாகத் தெரியவில்லை. யாழ். நகரை அமர்க்களப்படுத்தவிருக்கும் பெரும் போட்டிகளுக்கு முன்பாக எங்கும் தமிழ் எல்லாம் தமிழில் எனும் நிலை கரைகடந்து நிற்பதைப் பரக்கக் காணக் கூடியதாகவிருக்கும்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை மார்ச் மாதத்தில் அங்கு கோலாகலமாக நடைபெறவிருக்கும் தமிழ் ஆராய்ச்சி மாநாடு தூங்கிக்கிடக்கும் மொழி ஆர்வத்தை பள்ளி எழவைக்கும் என்பதில் ஐயம் இல்லை, மட்டக்களப்பு தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகளை அவதானிப்பதற்கு குடாநாட்டு மாணவர் அங்கு பெருந்திரளாகச் செல்லவுள்ளனர். மாநாட்டிற்கு வருகைதரவிருக்கும் பேராளர் பார்வையாளர்களுக்கு மட்டுமல்லாது, மாணவர் பொதுமக்களுக்கும் தங்குமிட வசதி ஏற்பாடுகளை மாநாட்டு வரவேற்புக் குழுவினர் கவனிக்க வேண்டியவர்களாகவிருக்கின்றனர்.

---

# ஆதியில் இல்லை சாதி- இது பாதியில் வந்த அநீதி!

## தமிழினத்திலிருந்து சாதிச் சனியனை வேரோடு கெல்லியெறிவோம்!

தமிழ்இனத்துக்கு உரிமை வாழ்வு கிடைக்குமானுல் சிறுபான்மைத் தமிழர் முற்காலத்தைப்போல் மீண்டும் நசுக்கப்படுவார்கள் என்று சாதி அரசியல் பேசுகின்ற ரஷ்ய, சீன கம்யூனிஸ்டுகள் சிறுபான்மைத்தமிழரிடம் கூறிவருகின்றனர். விடுதலையை வேண்டி ஒன்றுபட்டிருக்கும் தமிழ் மக்களை சாதியின் பேரால் பிரித்து பலவீனப்படுத்தி விடலாம் என்று இவர்கள் பகற்கனவு காண்கிறார்கள்.

முற்காலத்தில் நம் நாட்டிலும் பார்க்க மிகவும் உக்கிரமாக சாதிவெறி தாண்டவமாடிய பாரதத்தமிழகத்தில் சிறுபான்மைத் தமிழர் முற்காலத்தைப் போலவே நசுக்கப்படுகிறார்களா? இல்லையே, அங்கே சட்டத்தாலும் பிரச்சாரத்திட்டத்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தி. மு. க. அரசுசெய்த அரிய சேவையினுலும் சாதியடக்குமுறை எவ்வளவோ ஒழிக்கப்பட்டுவிட்டது. மேலும் ஒழிக்கப்பட்டு வருகிறது. இதே போல்தான் ஈழத்தமிழகத்திலும் இன்றுள்ள மிச்ச சொச்ச சாதிப் பூசல்களும் ஒழிக்கப்படும். இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன் அல்லது இருபத்தைந்து வருடங்களுக்கு முன் இருந்த சாதி அடக்குமுறை இன்று எப்படி ஒழிந்ததோ அதே போல்தான் எதிர்காலத்திலும் மேலும் ஒழிந்து போகும்!

முற்காலத்தில் சாதியடக்கு முறைக்குக் காரணம் நிலப்பிரபுத்துவ ஆட்சிமுறை இருந்தது. அரசன் என்பவன் ஆட்சிசெய்தான். இதனுல் அரசனின் கையாட்களும் சேவகர்களுமான பிரபுக்களும் செல்வந்தர்களும் உடையார் மணியகாரன், விதானைமார் போன்ற அரச அதிகாரிகளும் மற்றும் உயர் சாதி மக்களும் தங்கள் நிலங்களையும் சொத்துக்களையும் வளப்படுத்தி பாதுகாத்துக் கொள்வதற்காக சிறுபான்மைத் தமிழரை மிகவும் கொடுமைப்படுத்தி அடக்கியாண்டனர். எனவே அப்போது சாதி அடக்குமுறைக்கு சில காரணங்கள் ஏதுவாக அமைந்தன.

ஆனுல் இன்று முடியாட்சி அற்று நிலப்பிரபுத்துவ அடக்குமுறை ஒழிந்து பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிநிலவுகின்ற இக்காலத்தில் சுதந்திரம், விடுதலை, எமது பிறப்புரிமை என்று உலகமே கர்ச்சிக்கின்ற இக்கால கட்டத்தில் அறிவும் நாகரிகமும் வளர்ச்சியுமடைந்த இன்றைய உலகில் தமிழனுக்கு உரிமை வாழ்வு கிடைத்தால் மீண்டும் சாதி அடக்குமுறை ஏற்படும் என்று கம்யூனிஸ்டுகள் கூறுவது தமது கட்சி வளர்ப்புக்காகவே தவிர எமது சமூகத்தின் மீது கருணைகொண்டல்ல.

தமிழினத்தை சாதி, மத, பிரதேச முறையில் பிரித்து தமிழர் சக்தியை குறைத்து தமிழினத்தைஒழிப்பதையே தமது நோக்கமாகக்கொண்டுள்ள பெரும்பான்மை இனத்து அரசியல் வாதிகள் தமக்குள்ளும் சாதிப்பிரிவினையை வைத்துக்கொண்டு சிறுபான்மைத் தமிழர் மீது கருணைகாட்டுவதென்பது ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத கதை மாதிரித்தான்.

இலங்கையில் சாதிப்பிரச்சினை ஒழிக்கப்படு[illegible] முதலில் வித்திட்ட[illegible] ளையர் ஆட்சிக்காலமே தவிர அதற்குப் பிற்பட்ட ஆட்சியல்ல. அதே போல் சிறுபான்மைத் தமிழரிடமும தமது பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமென்ற விழிப்புணர்ச்சிஏற்பட்டதும்வெள்ளையர் ஆட்சியில்தான். எனவே அந்த விழிப்புணர்ச்சியை இனிமேல் எந்த சக்தியாலும் அழித்துவிடமுடியாது என்பதை சாதி அரசியல் பேசுவோர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இச்சாதிப்பிரிவினை தமிழரின் பூர்வீக சொத்துரிமையல்லவென வரலாறு சான்று பகிர்கிறது. ஆதித் தமிழனிடம் சாதிப்பூசல்கள் மருந்துக்கும் கிடையாதெனஅறிஞர்கள் இடித்துரைக்கின்றார்கள். இடைக்காலத்தில் சுயநலமிகளால் தம் சுகபோக வாழ்வுக்காக தமிழரிடம் நுழைக்கப்பட்டதே இந்தச் சாதிப் பிரிவினை ஆகும். எனவே பாதியில் வந்த சாதியை ஆதியில் [illegible] தாகும்.

**துன்னை**

**மகேந்திரன்**

பெரும்பாலான தமிழர் பின்பற்றும் மதமான சைவத்தில் சாதிவெறியைச் சாடியிருக்கிறார்கள் நாயன்மார்களும் சமயப்பெரியார்களும். "ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்று பாடினுர். திருநாவுக்கரசர். "திருநீலகண்டத்து குயவனுர்க்கும் அடியேன்" என்றுர் அந்தணரான சுந்தரரும் ஆகவே எமது சமயத்திலும் சாதியை கண்டித்திருக்கிறுர்கள் எமது முன்னோர்கள்.

தமிழினத்தின் மத்தியில் வருங்காலத்தில சாதி சமய பிரதேச வர்க்கவேறுபாடற்ற சோசலிசம் இருக்குமென எமது தலைவர்களே கூறிவருகிறுர்கள். ஏனெனில் அரசு சுவீகரித்த ஐந்தரை லட்சம் ஏக்கர் காணியில் ஆக எட்டாயிரம் ஏக்கர் காணியே தமிழ் பகுதியில் சுவீகரித்ததாகும். இதினிருந்து தமிழ் பிரதேசத்தில் இயற்கையாகவே சோசலிசம் சமத்துவம்இருக்கிறது. எனவே தமிழினம் உரிமை வாழ்வை நிலை நாட்ட சிறுபான்மைத் தமிழரும் தமது பங்கை செலுத்துவது அவர்கள் கடமையாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகாரி முசோலினியின் கதை

# சனநாயகத்தைவிட்டு விலகிச் செல்வோருக்கு முசோலினியின் முடிவு சிவப்பு விளக்கு!

எழுத்து வேந்தன் மாசினி, எழுச்சி வேந்தன் கரிபால்டி இருவரும் கட்டி எழுப்பிய இத்தாலியில் "குடியரசா? அது அழுகிக்கொண்டிருக்கும் ஒரு பிணமன்றோ" என்று கர்ச்சித்த முசோலினி 1883ம் ஆண்டு பிறந்தான்.

முசோலினியின் தந்தை ஒரு கொல்லர். அவர் தனது தொழிலுடன் அந்நாட்டு அரசியல் விவகாரங்களிலும் அன்றாடம் கருத்துப் பரிமாறி வந்தார். இத்தாலியின் ஏழைகள் எடுப்பார் கைப்பிள்ளையாக வாழும் வாழ்க்கையை, உலைக்களத்தில் எரியும் தணலைப்போல், கனல்மிக்க அரசியல் சிந்தனைகளை அங்குவருவோருக்கு வகை வகையாக எடுத்துரைத்தார். உலைக்களம் வந்து போவோர் அவர் கருத்துக்களைக் கேட்டு மனதில் கனன்று செல்வர். வந்து செல்வோருடன் தானும் ஒருவனாக நின்று தந்தையின் கருத்துக்களை முசோலினி கேட்டுக்கேட்டு ஆவேசமடைந்தான். உலைக்களத்தின் சூடு உடலில் பாயும் அதே வேளை அவன் உள்ளத்திலும் புரட்சியின் கனல் வீசும். இத்தாலியை இன்ப நாடாக ஆக்கவேண்டும். ஏற்றத்தாழ்வற்ற சமுதாயமாக அதை மாற்றவேண்டும் என்று குமுறுவான்.

உள்ளக் குமுறல் புகைந்து புகைந்து ஈற்றில் எரிமலையாக வெடித்தது. அமைதி, சமாதானம், என்ற வார்த்தைகளை அவன் மதிக்கவில்லை. உலக சமாதானமா? உலக அமைதியா? அதெல்லாம் வீரமற்ற வீணர்களின் முகமூடி. கையாலாகாதவரின் கொக்கரிப்பு" என்று அவன் எண்ணினான்.

'போர் என்பது மனித உணர்ச்சிகளின் உச்ச நிலை. அந்தஉணர்ச்சியைத்தூண்டி வாழ்வா சாவா என்னும் நிலையில் மனிதனை நிற்க வைத்து அரிய செயல்களை ஆற்றுவதுதான் முன்னேற்றம்" என்று முழங்கினான் முசோலினி.

பள்ளிப் படிப்பில் முகைவிட்ட போர்ச் சிந்தனை அவன் ஆசிரியத் தொழில் பார்த்தபோது மலர்ந்தது. தொழிலுக்காக சுவிட்சர்லாந்து சென்ற முசோலினி அங்கு அரசியல் சொற்பொழிவுகளைக் கேட்டான். அரசியல் சொற்பொழிவுகளைக் கேட்டதோடு தானும் சொற்பொழிவுகளை நிகழ்த்தினான். வன்முறைதான் ஒரு நாட்டின் இன்னலைப் போக்கும் மாமருந்து என்று கூறினான். அச்சமுற்ற சுவிஸ் அவனை வெளியேற்றியது.

பலமொழிகளிலும் பரிச்சயமான முசோலினி பிரான்சுக்குச் சென்றான். அங்கும் போர் பற்றிய சிந்தனைகளை மக்கள் முன் பரப்பினான். அங்கும் அவனுக்கு வெளியேற்ற அறிவித்தல் கிடைத்தது. வேற்று நாடுகளில் தன் எண்ணத்திற்கு வரவேற்பில்லாததைக் கண்ட முசோலினி தாயகம் திரும்பினான். போர்ப்படையில் சேர்ந்தான். போர்ப்பயிற்சி முடித்து வெளிவந்ததும் ஆசிரியனானான்.

அந்நேரத்தில் இத்தாலியை அறிவும் ஆற்றலும் இல்லாத சிலர் ஆண்டுகொண்டிருந்தனர். அவர்கள் ஆட்சியில் வறுமை தாண்டவமாடியது. வறுமையின் காரணமாக அங்கு பொதுவுடைமைத் தத்துவம் பரவிவந்தது. வறுமையை அகற்றி அங்கு வாழும் மக்களை ஏழ்மையினின்றும் மீட்க எண்ணினான் முசோலினி.

அந்த நேரத்தில் ஒட்டமான் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இத்தாலிய அரசு போர்தொடுக்கமுன்வந்தது. பொதுவுடமை இயக்கம் இதனை வன்மையாக எதிர்த்தது. "போர்லி" என்னும் பொதுவுடைமை ஏட்டின் ஆசிரியனாக இருந்த முசோலினி போரை எதிர்க்கும் இயக்கங்கள் பற்றிய செய்திகளை வெளியிட்டான், இத்தாலிய அரசு முசோலினியின் எதிர்ப்பைக்கண்டு கண் விழித்தது. அவன் எழுத்துக்கள் இத்தாலி மக்களைத் தட்டி எழுப்புவதாக இருந்தது. முசோலினியின் எழுத்து இத்தாலி மக்களை விழிப்புறச் செய்வதாக எண்ணிய அரசு முசோலினிக்கு ஒரு வருட சிறைவாசத்தை அளித்தது.

சிறைமீண்ட முசோலினி "அவந்தி" என்னும் ஏட்டின் ஆசிரியனான். இலட்சக் கணக்கில் "அவந்தி" வெளி வந்தது. இத்தாலி மக்கள் விழுந்தடித்துக்கொண்டு பத்திரிகையை வாங்கிப்படித்தனர்.

## புத்தொளி

1914ம் ஆண்டு ஆடிமாதம் முதலாவது உலக மகாயுத்தம் தொடங்கியது. பொதுவுடைமை இயக்கத்தினர் போரில் இத்தாலி சேரக் கூடாது என்று உறுதியுடன் நின்றனர். முசோலினியோ போரில் கலந்துகொண்டு பிரிட்டன், பிரான்ஸ் பக்கம் இத்தாலி சேரவேண்டும் என்றான். பொதுவுடைமையாளர் முசோலினிக்குக் கட்சியிலிருந்து கல்தா கொடுத்தனர். "அவந்தி" ஏட்டின் ஆசிரிய பதவியையும் பறித்தனர்.

பின்னர் "இத்தாலிய மக்கள்" என்னும் பத்திரிகை ஆசிரியனானான். தன் கொள்கையைவலியுறுத்திக்கிளர்ச்சியை ஏற்படுத்தும்கட்டுரைகளை வரையலானான். மூலை முடுக்கெங்கணும் சென்று எழுச்சிமிக்க உரைகளை நிகழ்த்தினான். முசோலினியின் வேகத்திற்கு இத்தாலிய பொதுவுடைமைவாதிகளால் நின்றுபிடிக்கமுடியவில்லை. முசோலினியின் சூறாவழி சுற்றுப்பயணத்தில் பொதுவுடைமைவாதிகளின் குரல் கேட்கமுடியாமல் போய்விட்டது. முசோலினியின் அணியில் மக்கள் முண்டியடித்துக்கொண்டு சேர்ந்தனர்.

1915ம் ஆண்டு இத்தாலி, ஆஸ்திரியாவுக்கும் ஜெர்மனிக்கும் மாறுக பிரான்சின் அணியில் சேர்ந்தது. முசோலினி படையில் பதவிபெற்று ஆஸ்திரியாவுடன் ஏற்பட்ட போரில் படுகாயமுற்றான். தனது எழுத்தின் சக்தியால் இத்தாலியப்படை [illegible] யப்படை [illegible] முன்னின்றான். முழு மூச்சாக எழுதினான். 1919ல் போர் முடிந்து வெர் சேல்ஸ் நகரில் ஒப்பந்தம் முடிந்ததும் போரில் ஏற்பட்ட வரவு செலவைப் பார்த்து இத்தாலி மக்கள் இடியேறு கேட்டவர்களாக திகைப்புற்றனர்.

இப்போரில் இறந்துபட்ட இத்தாலியர் எண்ணிக்கை 6லட்சத்து 52 ஆயிரம். உடல் ஊன முற்றோர் 4லட்சத்து 50 ஆயிரம். படுகாயமடைந்தோர் 10 லட்சம் பேர். இத்தனை இழப்புக்களுக்கும் மத்தியில் இத்தாலிக்குக் கிடைத்ததோ ஜரா என்ற ஒரு பிரதேசந்தான். போரினால் இத்தாலியின் பொருளாதாரம் ஆட்டங் கண்டது. மக்கள் சொல்லொணாக் கஷ்டமடைந்தனர். குழப்பங்கள் எழுந்தன. வேலை நிறுத்தங்கள் தொடர்ந்தன. தொழிலாளவிவசாயிகளின் எழுச்சி பொதுவுடைமைக் கட்சிக்கு ஆதரவானது. குழப்பங்களையும், வேலை நிறுத்தங்களையும் அரசு கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடியது. போர் முடிந்து வீடு திரும்பிய படை வீரர்களை பயன் படுத்தி பாசிசப் படை ஒன்றை உருவாக்கினான். முசோலினி பாசிசத்தைப் பட்டிதொட்டி எங்கணும் பரப்பினான்.

இத்தாலியில் 1921ல் தேர்தல நடந்தது. முப்பது தோழர்களுடன் பாராளுமன்றம் சென்றான். முசோலினி ஆளும் கட்சியினருக்கு சிம்மசொப்பனமாக விளங்கினான். மக்களாட்சி முறையில நம்பிக்கை அற்ற முசோலினி பாசிசத்தை இத்தாலி எங்கும் பரப்பினான். அவன் படையில் பல வீரர்கள் சேர்ந்தனர். பாசிச படைகள் பல நகரங்களைப் பிடித்தனா. 1922ல் அமைச்சரவை விலகவே முசோலினிக்கு அழைப்பு விடுத்தார் அரசர். முசோலினி அமைச்சரவையை நிறுவினான்.

பல கட்சிகளால் இத்தாலி மக்கள் பிளவுபட்டிருந்ததைக் கண்ட முசோலினி, இத்தாலி உருப்பட ஒரு கட்சி மட்டும் இருந்தால் போதும்என்று எண்ணினான். ஒரே கட்சி ஆட்சியை நோக்கி அவன் சிந்தனை செயல் வேகமடைந்தது. எதிர்க்கட்சிகள் சட்ட விரோதமாக்கப்பட்டன. பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப்போட்டான். பாராளுமன்றம் பெயரளவிலிருந்தது. பாசிஸ்ட்மன்றம் நாட்டை ஆளும் உறுப்பாக மிளிர்ந்தது. முழு அதிகாரமும் பெற்றவனாக முசோலினி இருந்தான்.

அவனை எதிர்த்தவர்கள் தலை மண்ணில் உருண்டது. கொலை, களவு, கற்பழிப்பு, என நாட்டில் பிரளயமொன்று உருவாகி வந்தது. பாசிசத்திற்குப் பணியாதோரை நாடு கடத்தினான் முசோலினி. முசோலினியின் முரட்டுப் பிடிவாதத்தால் [illegible] ரத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். முசோலினி மீண்டும் தேர்தலைச் சந்தித்தான். மிகப்பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்தான். சில காலத்தின் பின் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டான். முசோலினி சர்வாதிகாரியானான். 1939ல் அல்பேனியாவை ஆக்கிரமித்த முசோலினி கிரேக்கத்திற்குப்படை எடுத்தான்.

கிரேக்கத்தின் எதிர்ப்பு அவனை கதிகலங்கவைத்தது. சர்வாதிகாரியான அவனின் பலம் மெல்ல மெல்ல சரியத் தொடங்கியது. உள்நாட்டிலும் அவனுக்கு எதிர்ப்பு வளர்ந்தது. பாஸிஸ்டு மன்றத்தினரே முசோலினிக்குக் குழி பறிக்க முற்பட்டனர்.

1943ல் இத்தாலியில் சிசிலித் தீவில் தேச நாடுகளின் படைகள் வந்திறங்கின. இச் சந்தர்ப்பத்தில் முசோலினி தனது சகாக்களினாலேயே கைது செய்யப்பட்டான். இட்லர் முசோலினியை மீட்டு வட இத்தாலிக்கு அழைத்துச்சென்றான். அங்கு ஒரு தற்காலிக அரசாங்கத்தை அமைத்தான்முசோலினி 1943ல் இட்லரின் ஆதிக்கம் தகர்க்கப்பட்ட பிறகு தப்பி ஓட முயன்றான். சுவிட்சர்லாந்து எல்லையை நோக்கி ஓடிக்கொண்டிருந்த போது இத்தாலியின் வீரர்கள் அவனைச் சுட்டு வீழ்த்தினர்.

சர்வாதிகாரியான முசோலினியின் உடல் மிலான் நகரில் தலைகீழாகத்தொங்க விடப்பட்டது.

குடியரசு ஒரு அழுகிக்கொண்டிருக்கும் பிணமென்று சொன்ன முசோலினி மிலான் நகரில் பிணமாக அழுகிக்கொண்டு தொங்கினான்.

மக்களின் அபிலாசைகளுக்கும், சனநாயக கோட்பாடுகளுக்கும் மதிப்பளிக்காத முசோலினி போர்வெறி என்ற பித்துப் பிடித்து, தனது சகாக்களாலேயே சுட்டுக்கொல்லபட்டது ஜனநாயக தண்டவாளத்தை விட்டுத் தடம் புரளுவோருக்கெல்லாம் சிவப்பு விளக்காக இருக்ககட்டும்!

# செய்தித் தணிக்கை

அவசரகாலச் சட்டத்தின் 5ம் பிரிவின் கீழ் 1976 பெப்ரவரி 5ம் நாள் சிறீலங்காப் பிரதமரின் விதப்புரையின் மீது சிறீலங்கா குடியரசின் தலைவரினால்பிரகடனப்படுத்தப்பட்ட (பத்திரிகைத் தணிக்கைபற்றிய) ஒழுங்கு விதிகள் வருமாறு:—

(1) சிறீலங்காவின் அரசியலமைப்பின் 18 ஆம் பிரிவினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் மீளப்பெறும் அல்லது குறைக்கும் உத்தேசத்திட்டம் அல்லது விதப்புரை எதனையும்—

(2) சிறீலங்காவின் ஏதேனும் பாகத்தைத் தனியாகப் பிரிப்பதற்கான அல்லது அதன் ஆள்புல பூரணத்துவத்தை சிதைப்பதற்கான கிளர்ச்சி அல்லது இயக்கம் எதனையும்— (Any agitation or movement for the secession of any part of Sri Lanka or the disruption of the Territorial integrity thereof;)

(3) சாதி, மதப்பூசல்கள் தொடர்பான சம்பவம் எதனையும்—

பதிவுசெய்யும், விவரிக்கும், தகவல் கொடுக்கும் அல்லது விமர்சிக்கும் அல்லது—

சாதிமதப் பூசல்களை உண்டாக்கும், அல்லது சிறீலங்கா வாழ் குடிமக்களின் வெவ்வேறு பிரிவினர்களிடையே, அல்லது கூட்டத்தாரிடையே வெறுப்புணர்ச்சியை, அல்லது எதிர்ப்புணர்ச்சியை ஊக்குவிக்கும் அல்லது வளர்க்கும் சாத்தியமுடையதாயிருக்கும்—

நிழற்படம், படவிளக்கக் குறிப்பு, அல்லது வேறு விடயம் எதனையும்— அத்தகைய விடயத்தில் வெளியீடானது தகுதி வாய்ந்த அதிகாரியின் முன் அங்கீகாரத்தைப் பெற்றாலன்றியும் அது அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட வடிவத்தில் இருந்தால் தவிரவும்— செய்தித்தாள், சஞ்சிகை, மாத வெளியீடு, துண்டுப்பிரசுரம் அல்லது வேறு வெளியீடு எதனிலும் எவரும் வெளியிடுதலாகாது.

இவ்வொழுங்கு விதிகளின் கீழான ஏதேனும் தவறைப் புரிந்தவரெனச் சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றம்சாட்டப்பட்ட ஆள் எவரையும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் சம்மதத்துடனன்றி—பிணையில் விடுதல் ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிரச்சினைகளுக்கு தீர்வு....

—1-ம் பக்கத்தொடர்

கும் மாவட்ட அரசியல் அதிகாரியாக தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்பகுதி மக்களுடைய சார்பிலே நான் பொது நிர்வாக அமைச்சரவர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். அங்கேயுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் அமைச்சருடைய ஆதிக்கத்திலேயிருந்த பொழுது, அவர் தம்முடைய நண்பர் தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சரின் ஆலோசனையைப்பெற்றதால் அக்கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் நாசமாகிவிட்டன என்று நாங்கள் பலமுறை கூறினோம். ஏனைய பல உறுப்பினர்களும் இதை ஏற்றுக்கொள்வார்கள். அது இப்பொழுது கைமாறியது வரவேற்கத்தக்கது.

ஆனால், இப்பொழுது மன்னாருக்கும் வவுனியாவுக்கும் அரசியல் அதிகாரியாகத் தபால், தந்திப்போக்குவரத்து அமைச்சர் நியமிக்கப்பட்டிருப்பதனால் அப்பகுதி தமிழ் மக்களிடத்தில் ஒரு பயம் ஏற்பட்டிருக்கிறது. அங்கேயுள்ள காணியாதிகாரி அலுவலகங்களும் கச்சேரிகளும், அரசியல் கூடங்களாக மாறி அங்கே அனர்த்தங்களை விளைவிக்குமோ என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

முந்திய அமைச்சரவர்கள் நேர்மையாகவும் நீதியாகவும் நடந்து, அரசியல்வாதிகளுக்கு இடங்கொடுக்காமல் தமது கடமைகளை நடத்தினார். அந்த முறையிலே நடத்தவேண்டுமேயொழிய கூட்டுறவுச் சங்கங்களை நடத்தினமாதிரி இவற்றையும் நடத்தினால் மாவட்ட நிர்வாகம் சீர்குலைந்துபோய்விடும். ஆனபடியால் இந்தத் துறையிலே தபால், தந்திப் போக்குவரத்து அமைச்சரின் புத்திமதியின்படி நடக்காமல் அமைச்சரவர்கள் மனச்சாட்சிப்படி நிர்வாகத்தை நடாத்துவது மிக இன்றியமையாதவொன்றாகும். ஏனென்றால் சில அரசாங்க உத்தியோகத்தர்கள் வவுனியாவிலிருந்தும் மன்னாரிலிருந்தும் மாற்றங்கேட்டு வெளியிடங்களுக்கு வந்துவிடுவோம் என்று எண்ணுகிறார்கள். இதை நான் இங்கே சொல்லவேண்டியது என்னுடைய கடமையாகவிருக்கிறது. ஆகவே, தமிழ் மக்களின் சார்பிலே அமைச்சரவர்களுக்கு இதை ஒரு வேண்டுகோளாக விடுக்கின்றேன்.

நாங்கள் இங்கே எப்பொழுதுமே குறைகூறிக்கொண்டும், மொழிப் பிரச்சினை, உத்தியோகப் பிரச்சினை, குடியேற்றப் பிரச்சினை, குடியுரிமைப் பிரச்சினை, ஆட்சிப் பங்குப் பிரச்சினை முதலிய உரிமைகளுக்குப்போராடிக்கொண்டும் இருப்பதிலும் பார்க்க இவற்றையெல்லாம் ஒரே முறையில் தீர்ப்பதற்கும் நீங்கள் சிங்கள மொழியையும் பௌத்தத்தையும் நல்ல முறையிலே வளர்ப்பதற்கும் மிகச்சிறந்த வழி நாம் பிரிந்து வாழ்வதுதான் என்றும்—இதுதான் வரலாறு காட்டும் வழியென்றும், நாங்கள் தனியே வாழ்வதுதான் இப்பொழுது ஒரேயொரு வழியென்றும் கூறி எனது உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

# இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை....

—1-ம் பக்கத் தொடர்

தலையிடுவதற்குரிய அதிகாரமும் தி. மு. க, அரசுக்கு இருந்ததில்லை. அது செய்ததெல்லாம் இலங்கை அரசுடன் இந்திய அரசு தனக்கிருக்கும் நட்புரிமையை பயன்படுத்தி இலங்கைத் தமிழர் பிரச்சினையை தீர்த்துவைக்க முயற்சிக்க வேண்டுமென அடிக்கடி இந்திய அரசைக் கேட்டுக்கொண்டது தான்! இந்திய மத்திய அரசிடம் தி. மு. க, இதை வலியுறுத்தி வந்ததே தவிர—இலங்கையுடன் அது எந்த வித தொடர்பையும் கொண்டதாக நாம் கேள்விப்படவில்லை!

அதுமட்டுமல்ல — 1974ம் ஆண்டு தை பத்தாம் நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின் போது பொலிசார் தமிழ் மக்களைத் தாக்கி அதன் விளைவாக ஒன்பது தமிழர் இறந்த அந்தப் பரிதாப சம்பவம் நடைபெற்று முடிந்த இரண்டொரு நாட்கள் கழியுமுன்பே இந்தியா சென்றிருந்த இலங்கைப் பிரதமரை சென்னையில் மாலையிட்டு வரவேற்று தமது பண்பாட்டை எடுத்துக்காட்டியவர், கருணாநிதி, அப்போது இலங்கைப் பிரதமருக்கு கறுப்புக் கொடி காட்டிய டாக்டர் சனார்த்தனம், மணவைத் தம்பி போன்றோரை சிறைக்குள் தள்ளி தனது பொறுப்புணர்ச்சியை எடுத்துக் காட்டியவர் தமிழக முதல்வர்.

"அப்போது சென்னையில கருணாநிதியுடன், இலங்கைப் பிரதமரும் அவரது மகன் அனுராவும் கூட இருந்து எடுதத படத்தை இலஙகையில் அரசாங்க ஆதரவாளர்கள் ஆயிரக்கணககில் அச்சிட்டு வநியோகித்ததையும், இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தி. மு. க. தலையிடாதென தமககு முதல்வர் கருணாநிதி உறுதி கூறியதாக இலங்கைப் பிரதமரின் மகன் அனுரா பெருமிதத்துடன் யாழப்பாணக் கூட்டங்களில் கூறித்திரிந்ததையும் திருமதி இந்திராகாந்தி அறிந்திருக்க நியாயமில்லை.

"நிலைமை இப்படியிருக்க யாரோ கொடுத்த தவறான தகவலைக்கொண்டு தி. மு. க. மீது இப்படியொரு அபாண்டப் பழியை இந்தியப் பிரதமர் சுமத்தியிருப்பது வருத்தத்தை அளிப்பதாக உள்ளது!"

—இவ்வாறு அத்தமிழர் கூட்டணிப் பிரமுகர் மேலும் தெரிவித்தார்.


10-வது வெற்றி வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) லிடோ (யாழ்நகர்)

ஜெமினி கணேசன் - பத்மினி
கே. ஆர். விஜயா, ஜெயலலிதா நடித்த-

அன்னை வேளாங்கண்ணி

பிளாசா 3-வது வாரம்

ஜெய்சங்கர், ஜெயசித்ரா, வி. கே. ராமசாமி, மனோரமா.
கே. ஏ. தங்கவேலு, ஏ. சகுந்தலா, சீனிவாசன்,
எம். ஆர். ஆர். வாசு நடித்த—

உங்கள் விருப்பம்

திரைக்கதை—டைரக்ஷன் — கே. கிருஷ்ணமூர்த்தி

இப்பொழுது காட்சியளிக்கிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்நகர்)

முத்துராமன், நந்திதாபோஸ்
பண்டரிபாய், சுந்தரராஜன்,
ராஜகோகிலா, ஜெயசீலன்

நடித்த — தாகம்

மயக்கும் மலர் விழியாள்— மயங்க வைக்கும் கொடி இடையாள்—
அன்ன நடை உடையாள்—மதிவதன முக முடையாள் —
முத்துப்பல் வரிசையினள்—என பார்த்தோரை மயங்கவைத்து தனக்கு
ஆதாரம் தேடும் மங்கையரைப்பற்றித்தான் நீங்கள் அறிந்திருப்பீர்கள்—
ஆனால் இவ்வளவையும் தன்னிடத்தே கொண்டிருக்கும் வனிதை ஏன்
மயங்குகிறாள்— அவள் புரிந்த குற்றம்தான் என்ன? இதற்கு விடிவோ?
பரிகாரமோ இல்லையா? பார்த்து விடைகூற உங்களை அழைக்கிறோம்.

2வது வாரம்! செல்லமகால்

மயங்குகிறாள் ஒரு மாது

முத்துராமன், சுஜாதா, தேங்காய் —நடித்த

பின்னணி: வாணி ஜெயராம், பாலசுப்பிரமணியம், ஜேசுதாஸ்

உணர்ச்சிக் காவியம்.

7-வது வாரம்

கெபிட்டி

நெல்சன் (திருமலை)

சிவகுமார், தேங்காய்
செந்தாமரை, லட்சுமி,
மனோரமா நடித்த-

கண்மணி ராஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு—13 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976—ம் வருடம் பெப்ரவரி மாதம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.